366

OVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

1575

கோகலே தமிழ் வாசகம்

நான்காம் வாசகம்

EDITED BY
P. T. SREENIVASA IYENGAR.



V. S. VENKATARAMAN & CO,
PUBLISHERS, KUMBAKONAM.

கோகலே
நான்காம் வாசகம்

1663
474·8146
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 APR 1930
MADRAS

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.
8—4—1930 கேஜட்டின் 228-ம் பக்கம் பார்க்க)

1628

பதிப்பாசிரியர்:
பி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை அணா 5

Reprinted 1936.

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD, MADRAS

முன்னுரை

சென்னைச் சர்வகலா சங்கத்தின் இந்திய தேச சரித்திர ஆராய்ச்சியாளரும், நமது தமிழ் நாட்டில் கல்வித் துறை பலவற்றிலும் ஈடுபட்டு மிகவும் உழைத்துப் பல நூல்கள் இயற்றி வந்தவருமாகிய ஸ்ரீமான் **P. T.** ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் தம் மனங்கனிந்த உதவியைக் கொண்டு கோகலே வாசகம் எனப் பெயரிய இப்பாட புத்தகங்கள் தொகுக்கப்பெற்றன.

நம் நாட்டு மக்களுக்கு இன்றியமையாத கல்வி அறிவு, உலக அறிவுகள் இளமை தொட்டே நமது சிறுவர்களுக்குப் புகட்டப்பெறின், இவை இளமனதில் பசுமரத்தாணி போல் நன்கு பதியக் கூடும். ஆகையால் இத்துணிவோடும் இளையோர்களுக்குக் கல்வி, ஒழுக்கம் தேசாபிமானம் முதலியன உண்டாவதற்கு ஏற்றபடி, “ பழையன கழிதல் புதியன புகுதல் ” என்ற கால முறையில் சித்திரப் படங்களோடு கூடிய இனிய கதைகளும், பழையனவும் புதியனவுமான பாடல்களும், பல விஷயங்களைப் படிப்படியாக வருத்தங் காட்டாது சிறுகச் சிறுகப் போதிக்கும் பாகுபாடு பொருந்திய பாடங்களும், சாதுரியமாகப் பேசுந் திறனை யளிக்கும் சம்பாஷணைகளும், தமிழ் வளமுறுத்தும் சொற்றொடர்களோடும் கூடிய பொருட்டிறனும், நீதிபுகட்டும் பழமொழிகளும், கடின மொழிகளுக்குப் பொருளும், வியாச முறையை விருத்தி செய்வதற்குதவும் வினாக்களும், பயிற்சிகளும், கதை சொல்லப் பழக்கும் முறையில் நின்ற கதைகளும் இக் கோகலே வாச

கத்தில் இனிமையாகத் திகழ்ந்து விளங்குவனவாம். அன்றியும், இதன்கண் பழங்காலத்தவருடைய வரலாறு, நீதி ஒழுக்கம் முதலியவைகளும், இடைக்காலத்தவர், தற்காலத்தவர்கள் தம் நற்செயலும் நம்மாணவர் மனத்தில் நன்கு வேரூன்றும் பொருட்டு நடித்துக் காட்டத்தகும் அபிநய மொழிகள், அபிநயப்பாட்டுகள் நிறைந்த நாடகங்களும் விரவியுள்ளன.

இவ்வாசகத்தைப் பதிப்பிக்கப் பலவிதத்திலும் உதவின பெங்களூர் செயிண்டு ஜோஸப் காலேஜ் தலைமைத் தமிழ் ஆசிரியர் திருவாளர் தொழுவூர் வே. செங்கல்வராய முதலியார் அவர்களுக்கும், சென்னை வெஸ்லியன் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர், ஸ்ரீமான் பி. ஆர். ராஜ சூடாமணி அவர்களுக்கும், இதுவரையில் எமது பாடபுத்தகங்களை ஏற்று ஆதரித்து வந்த கல்வி அதிகாரிகள், கலாசாலைத் தலைவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களுக்கும் யாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ்நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபட்ட எமது கோகலே வாசகம் என்றும் எங்கும் இனிது பரவுவதற்காக எல்லாம் வல்ல இறைவனது அருளை இறைஞ்சி ஏத்துவோம்.

V. S. வேங்கடராமன் கம்பேனி

பொருளடக்கம்

பாடம்	விஷயம்		பக்கம்
	கடவுள் வாழ்த்து	...	7
1.	கடவுள்	....	8
2.	சூரியன்	....	10
3.	நாம் வாழும் உலகம்	....	13
4.	நாளை நாளை	...	19
5.	கிளியும் பட்டுப்போன மரமும்	....	19
6.	விண்ணொளிப் பொருள்கள்	...	22
7.	வேளாண்மை	...	24
8.	உழவர் பழமொழி	...	27
9.	நிலக்கரி	...	28
10.	நெல்லும் சோளமும்	...	33
11.	அதிவீரராம பாண்டியர்	....	37
12.	வெற்றி வேற்கை I	...	39
13.	தையல் யந்திரம்	...	41
14.	கடமை அறியாத துறவி	...	44
15.	புதுக்கோட்டை ராஜ்யம்	....	49
16.	வெற்றி வேற்கை II	...	52
17.	சிவாஜி	....	53
18.	காகிதம்	....	56

பாடம்	விஷயம்		பக்கம்
19.	அடாது செய்தவன் படாது படுவான்	...	60
20.	ராட்டினம்	...	64
21.	கடல் ரோஜா	...	65
22.	நீராவியின் வருகை	...	71
23.	மேகம்	...	75
24.	திருவள்ளுவர்	...	80
25.	தீபாவளிப் பண்டிகை	...	84
26.	ஆகாயக் கூண்டும் ஆகாயக் கப்பலும்	...	88
27.	பசுப் பாட்டு	...	92
28.	பாடும் இல்லை பலனும் இல்லை	...	93
29.	தேச பக்தி	...	97
30.	பாரத நாடு	....	104
31.	சாரணச் சிறுவர் கடிதங்கள்	...	106
32.	வெற்றி வேற்கை III	...	110
33.	வெற்றி வேற்கை IV	...	112

17 APR 1958
MADRAS

கோகலே
நான்காம் வாசகம்

கடவுள் வாழ்த்து

ஒருவனே, போற்றி ! ஒப்பில் அப்பனே, போற்றி ! வானோர்
குருவனே, போற்றி ! எங்கள் கோமளக் கொழுந்து ; போற்றி !
வருக என்று என்னை நின்பால் வாங்கிட வேண்டும், போற்றி !
தருக நின்பாதம், போற்றி ! தமியனேன் தனிமை தீர்த்தே.

மாணிக்கவாசகர்

எந்தையே ! என்றும், எம்பெருமான் ! என்றும்,
சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன் ;
எந்தை ! எம்பெருமான் ! என்று வானவர்
சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனையே.

நம்மாழ்வார்

தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க தமிழ் மொழி ! வாழ்க தமிழ் மொழி !
வாழ்க தமிழ் மொழியே!
எங்கள் தமிழ் மொழி ! எங்கள் தமிழ் மொழி !
என்றென்றும் வாழியவே !
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வளமொழி வாழியவே.

பாரதியார்

1. கடவுள்

1. மனிதனுடைய அறிவுக்கு எட்டாமல் கடந்து நிற்பவர் கடவுள். அவருக்கு ஆதியும் இல்லை; அந்தமும் இல்லை. அவர் தாமாகவே தோன்றியவர் : அவர் பராபர வஸ்து.

2. கடவுளை முகக்கண்ணால் கண்டவர் ஒருவரும் இல்லை. ஒருபொழுதும் காணாத வஸ்து ஒன்று உண்டென்று நாம் நம்பவேண்டுமா? ஆம், நம்பவேண்டும். நாம் ஒரு மரத்தைப் பார்க்கையில் அதன் கிளைகளும் இலைகளும் அசைகின்றனவே. அவைகளை அசைப்பது காற்றன்றோ? காற்றைக் கண்டவர் யார்? என்றாலும், எல்லோரும் காற்றை உடம்பினால் உணருகிறார்கள்; காற்றென்னும் பொருள் உண்டென்று நம்புகிறார்கள்.

3. அப்படியே, நாம் கடவுளைக் காணவில்லை. ஆயினும், அவர் படைத்த பொருள்களை எப்பொழுதும் காண்கிறோம். ஆகையால், அப்பொருள்களைப் படைத்த கடவுள் ஒருவர் நிச்சயமாய் இருக்கிறார் என்று அறிகிறோம். நீ கப்பல் ஏறி ஒரு தீவுக்குப் போகிறாய் என்று நினைத்துக்கொள். அந்தத் தீவில் எவருமே இல்லை. அந்தத் தீவில் ஒரு அழகான வீட்டைப் பார்க்கிறாய். அந்த வீட்டிற்குள் பல பொருள்கள் அலங்காரமாக வைத்திருப்பதையும் பார்க்கிறாய். நீ தீவிற்குச் சென்றபொழுது எந்த மனிதனையும் பாராவிட்டாலும், அந்த வீட்டையும் அதிலுள்ள அழகிய சாமான்களையும்

பார்க்கிற பொழுது அந்த வீட்டைக் கட்டின எஜமானன் எங்கேயாவது இருக்கவேண்டும் என்று நம்புகிருய் அல்லவா? அப்பொழுது உன்னிடம் ஒருவன் வந்து, "இந்த வீட்டை ஒருவரும் கட்டவில்லை; இது தானுகவே வந்தது" என்ருல், நீ நம்புவாயா? நீ, அவனைப் புத்தியீனன் என்று நினைப்பாயே.

4. இப்படியே கடவுள் ஒருவர் இருக்கிருர் என்று நாம் அறிகிருேம். இந்தப் பூமி நமக்கென்று கடவுளால் படைக்கப்பட்ட வீடு. இந்தப் பூமியாகிற வீட்டில் நமக்கு வேண்டிய சகல வஸ்துக்களையும் அவர் படைத்து வைத்திருக்கிருர். சூரியன் நமக்கு ஒளி தரும் பெரிய விளக்கு. சந்திரனும் நட்சத்திரங்களும் இரவில் ஒளி தரும் விளக்குகள். காற்று நமக்குப் பிராணவாயுவைத் தருகிறது. நிலம் நமக்குத் தேவையான உணவுப் பொருள்களைத் தருகிறது. விருட்சங்கள் நமக்கு இனிமையான கனிகள் தருகின்றன. மழை நமக்குக் குடிக்க நல்ல ஜலம் தருகின்றது.

5. நம்மை மூடிக்கொள்ளும் உடைக்காகப் பருத்தி நமக்கு நல்ல பஞ்சு தருகின்றது. கடவுள் தந்த இந்த வீட்டில் நமக்கு என்ன குறை உண்டு? நமக்குத் தேவையானவை யாவும் இவ்வுலகில் இருக்கின்றன. ஒரு அற்பமாகிய வீடு கூடத் தானுக அமையாது. விசாலமான இந்தப் பூமி தானுகவே அமையுமா? ஒரு பொழுதும் அமையாது. இந்தப் பூமியையும் இதைச் சூழவுள்ள சூரியன், சந்திரன், நட்சத்

திரங்களையும் அமைத்தவர் ஒருவர் உண்டு. அவரே கடவுள். அவரை நாம் எப்போதும் நமது மனத்தில் நினைக்கவேண்டும்.

6. அவர் தம்மை அன்போடு நினைப்பவர் மனத்தைத் தொடுகிறார். அப்பொழுது அவரை நினைக்கிறவர்களுடைய மனக்கண் திறக்கிறது. அவர்கள் தங்கள் மனக்கண்ணால் கடவுளைப் பார்க்கிறார்கள். அவர்கள் பரமானந்தத்தை அடைகிறார்கள். கடவுள் அவர்களுக்கு அருள் புரிகிறார்.

பழமொழி :—" வையந்தோறும் தெய்வந்தொழு. "

அர்த்தம் :—ஆதி=முதன்மை. அந்தம்=முடிவு. பராபர வஸ்து=யாவரிலும் சிறந்து முதன்மையாய் இருக்கிற கடவுள். உணருகிறார்கள்=அறிகிறார்கள் நிச்சயமாய்=உறுதியாய். அலங்காரம்=சிறப்பு. புத்தியீனன்=அறிவில்லாதவன். ஒளி=வெளிச்சம். அற்பமாகிய=சிறிதாகிய. அமையாது=ஏற்படாது. பரமானந்தம்=அதிக சந்தோஷம். புரி=செய். வையம் தோறும்=எல்லா உலகத்திலும்.

---

2. சூரியன்

1. சிறுவர்காள்! காகம் கரைகின்றது; பொழுது புலர்ந்தது. நீங்கள் விரைவில் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வாருங்கள்; கீழ்த்திசையில் உதிக்கின்ற சூரியனைப் பாருங்கள்.

2. நீங்கள் கீழ்த்திசையில் உதிக்கின்ற சூரியனின் அழகிய காட்சியைப் பார்த்தீர்களா?

சூரியன் கிழ்த்திசையில் உதித்தபின் மெதுவாக வானத்தில் ஏறுகின்றது. வானத்தில் ஏறுந்தோறும் அதன் உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. நடுப்பகலில் அது ஆகாயத்



தின் நட்டுச்சியை அடைகின்றது; பின்பு, படிப்படியாக மேற்றிசை நோக்கி இறங்குகின்றது. மேற்றிசையில் இறங்குந்தோறும் அதன் உஷ்ணம் குறைந்துகொண்டே வருகின்றது. முடிவில் அது மேற்றிசையில் அஸ்தமித்து விடுகின்றது.

3. சூரியன் அஸ்தமித்தவுடனே அதனுடைய வெளிச்சத்தை நாம் பார்க்க முடியவில்லை. எங்கும் இருள் நிறைந்து விடுகின்றது.

இரவில் நாம் சூரியனின் உஷ்ணத்தை அவ்வளவாய் அறிகிறதில்லை. இரவு குளிர்ச்சியாய் இருக்கின்றது. பகல் உஷ்ணமாகவும், பிரகாசமாகவும் இருக்கின்றது.

4. நீங்கள் தினந்தோறும் சூரியனைப் பார்க்கிறீர்களே : உங்களுக்கு அதைக் குறித்து என்ன தெரியும்? நீங்கள் அதை மிகவும் பிரகாசமான ஒரு பந்து என்று நினைக்கிறீர்கள் அல்லவா? நீங்கள் நினைக்கிறபடி அது ஒரு சிறிய பந்து அன்று. அது மிகவும் பெரிய பந்து. சூரியன் எவ்வளவு பெரியது என்று நீங்கள் நினைக்க முடியுமா? முடியவே முடியாது.

5. அந்தப் பந்து முழுவதும் நெருப்புக் குழம்பாய் இருக்கின்றது. சூரியன் நெருப்புக் குழம்பான ஒரு பெரிய பந்தாய் இருக்கிறதினாலேதான், அது மிகவும் உஷ்ணமாயும், பிரகாசமாயும் இருக்கிறது. அதனாலேதான் சூரியன் பூமியிலிருந்து லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தபோதிலும், பூமியில் விழுகிற அதனுடைய வெயில் மிகவும் உஷ்ணமாயும் பிரகாசமாயும் இருக்கின்றது.

6. மிகவும் உஷ்ணமான வேனிற் காலத்தில் நடுப் பகலில் சூரியனுடைய வெயிலைப் பார்த்து நீங்கள் பயப்படுகிறீர்களா? சூரியன் சந்திரனைப் போல் குளிர்ச்சியாய் இருக்கக் கூடாதா என்று நினைக்கிறீர்களல்லவா?

7. சூரியன் உஷ்ணமாயும் பிரகாசமாயும் இருப்பதினாலேதான், இந்த உலகத்தில் நாமும்,

மற்றவர்களும் உயிரோடு வாழ்கிறோம். எல்லா உயிர்களும் சூரியனாலே தான் வாழ்கின்றன. சூரியனுடைய வெயிலும் உஷ்ணமும் இல்லாவிட்டால் உலகத்திலுள்ள புல் பூண்டுகள் யாவும் பட்டுப்போகும்.

8. சூரியன் இல்லாவிட்டால் இந்த உலகத்தில் மழையே பெய்யாது; உயிர்களே காணப்படா. இந்த உலகங்கூடத் தோன்றி யிருக்க முடியாது.

9. சூரியனே உலகத்திற்கு உயிரும் உஷ்ணமும் வெளிச்சமுமாய் இருக்கிறது என்ற உண்மையை மறவாதீர்கள். நீங்கள் தினந்தோறும் உங்கள் பாடங்களை நன்றாய் வாசித்து வந்தால், சூரியனைக் குறித்துப் பல விஷயங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

பழமொழி:—"சூரியனைக் கண்டு உலகம் விளங்கும்."

அர்த்தம்:—கரைகின்றது=கத்துகின்றது. காட்சி=தோற்றம். அதிகரித்து=அதிகமாகி. அஸ்தமித்தல்=மறைதல். பூண்டுகள்=செடிகளும், கொடிகளும், மரங்களும்.

3. நாம் வாழும் உலகம்

1. நம்முடைய பூமி சூரியனுடைய குழந்தை. நீங்கள் "அதெப்படி?" என்று கேட்கலாம்.

2. சூரியன் நெருப்புக்குழம்பாய் இருக்கிற ஒரு பந்து என்றோம் அல்லவா? நெருப்புக்

பூமி சூரியனிடத்திலிருந்து வந்தபொழுது சூரியனைப்போலவே எரியும் தீக்குழம்பாய் இருந்தது.

குழம்பாய் இருக்கிற சூரியன் என்னும் பந்து, ஓயாமல் பம்பரம் போலச் சுழன்று கொண்டே இருக்கிறது. அது இப்படியே வெகு காலமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. சூரியன் எத்தனை கோடி வருஷங்களாக இப்படிச் சுழன்று கொண்டிருக்கிறது என்று ஒருவருக்குமே தெரியாது.

3. ஓயாமல் சுழன்று கொண்டிருக்கிற நெருப்புக்குழம்பான சூரியன், ஏதோ ஒரு காலத்தில் திடீரென்று தன் உடம்பிலிருந்து ஒரு பாகத்தை உடைத்து வெகு தூரம் எறிந்து விட்டது. அப்படி எறிந்த சிறு பாகமும் சூரியனைப் போலவே நெருப்புக் குழம்பாக இருந்தது. அதுவும் சூரியனைப் போலவே உஷ்ணமாயும் பிரகாசமாயும் இருந்தது.

4. சூரியனிடத்திலிருந்து தெறித்துவந்த பந்து, தன் நிலையிலேயே ஓயாமல் சுழன்று கொண்டிருந்தது என்றோம் அல்லவா? அதோடு அது சூரியனையும் சுற்றிவர ஆரம்பித்தது. இப்படியே, குழந்தையாகிய சிறு பந்து தகப்பனாகிய பெரிய சூரியனைப் பிரதட்சணம் பண்ணிக்கொண்டிருந்தது. சூரியனிடத்திலிருந்து வந்த சிறு பந்து நமது பூமியேயாம்.

5. வெகு காலமாக நெருப்புக் குழம்பான பூமி என்னும் சிறு பந்து, சூரியனைப் பிரதட்சணம் பண்ணிக் கொண்டிருந்தது. அப்படியிருக்கும் பொழுது, ஒரு நாள் பூமியும் தன்னிடத்திலிருந்து ஒரு சிறு பந்தை வெளியே வெகு தூரம் எறிந்தது. அந்தப் பந்தும் பூமி

யைப் போலவே நெருப்புக் குழம்பாய் இருந்தது. அதுவும் தன் நிழலிலேயே பம்பரம் போலச் சுழன்று கொண்டிருந்தது. அதோடு அது தன் தாயாகிய பூமியைப் பிரதட்சணம் பண்ணிக்கொண்டே, பாட்டனாகிய சூரியனையும் சுற்றிவர ஆரம்பித்தது. இப்படிப் பூமியிலிருந்து பிறந்த சிறு பந்துதான் சந்திரன். அது இப்பொழுது குளிர்ந்து விட்டது.

6. சூரியனிடத்திலிருந்து வந்த பூமி முதலில் நெருப்புக் குழம்பாய் இருந்தது என்று படித்தோம், அல்லவா? பூமியில் அக்காலத்தில் மலைகளாவது, கடல்களாவது, நிலமாவது காணப்படவில்லை. எங்கே பார்த்தாலும் ஒரே தீக்கோட்டையாய் இருந்தது. அப்படியானால் அதில் என்ன தங்க முடியும்?

7. ஆனால், பூமி மெதுவாகக் குளிர்ந்து கொண்டே வரத்தொடங்கியது. வெகுகாலம் சென்றபோது, அதில் கடலும், மலைகளும், நிலமும் தோன்றின. பின்னும் பல ஆயிரம் வருஷங்கள் சென்றபோது, அதில் பலவிதமான மரங்களும், செடிகளும், கொடிகளும் தோன்றின. பின்பு, உயிர்கள் தோன்றின; புழுப்பூச்சிகளும், ஊருகிற பிராணிகளும், பறக்கிற பறவைகளும், பலவிதமான மிருகங்களும் தோன்றின. கடைசியாகப் பூமியில் மனிதர்களும் தோன்றினார்கள்,

8. நாம் வாழ்கிற இந்தப் பூமி மிகவும் அற்புதமானது. அதனுள் இருக்கிற செல்வத்தைப் போன்ற செல்வம் எந்த அரசர்களிடத்



(1) பூமி சூரியனிடமிருந்து வந்தபொழுதிருந்த வடிவம். (2) முட்டை வடிவடைதல். (3) கடைகூம்புதல். (4) கடைகூம்பிச் சந்திரனை எறிதல். (5) கடை உருளுதலும் குளிர்தலும். (6) நிலப் பரப்போடு கூடிய முழு உலகம்.

திலும் இல்லை. அதன் வயிற்றினுள்ளே ஏராளமான பொன் உண்டு; வெள்ளியுண்டு; இரும்பு உண்டு; செம்பு உண்டு; பித்தளை உண்டு; ஈயம் உண்டு; இன்னும் பலவகையான உலோகங்களும் உண்டு. அதன் வயிற்றினுள் வைரம் உண்டு; நிலக்கரி உண்டு. அதில் பலவிதமான கல் வகைகளும் இருக்கின்றன.

9. பூமியின் வயிற்றில் பலவிதமான செல்வங்கள் இருந்தாலும் அதன் வயிறு உஷ்ணமானது. அதனுள் செல்லச் செல்ல உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே வரும். முடிவில் எவருமே செல்லமுடியாத உஷ்ணமாகிவிடும். இன்னும் அதிக தூரம் உள்ளே சென்றால், நெருப்புக் குழம்பான பெரிய கடலைக் காண்போம். ஆனால், அதன் வயிற்றினுள் அவ்வளவு தூரம் ஒருவராலும் போக முடியாது. வேண்டுமானால் மனிதர்கள் கொஞ்சதூரம் பூமிக்குள் சுரங்கம் வைத்துச் செல்லலாம். சுரங்கம் செய்து அதனுள் கிட்ட இருக்கும் பல உலோகங்களையும் கொண்டுவரலாம். ஆனால், எவருமே அதன் நடுவயிற்றைக் காண முடியாது.

பழமொழி :—"பூமியைப்போலப் பொறுமை வேண்டும்"

அர்த்தம் :—ஓயாமல்=இடைவிடாமல், நிற்காமல். பிரகாசம்=வெளிச்சம். பிரதட்சணம்=சுற்றிவருதல். ஏராளம் =அதிகம். சுரங்கம்=பூமியினுள் செல்லும் கிணறு வழிகள்.

4. நாளை நாளை

நாளை நாளை என்னுதே.
நாளை வீணில் போக்காதே.
நாளை ஒன்று காண்போமோ
நாளும் நிலையில் புவிமேலே?
நாளை செய்யும் காரியத்தை
நாளை இன்றே முடிப்பாயே.
நாடி நாமே இருப்போமோ?
நாளை சுகமே வாழ்வோமோ?

---

5. கிளியும் பட்டுப்போன மரமும்

1. காசிக்கு அருகே ஒரு பெரிய காடு இருந்தது. தேவர்களுக்கு அரசனுன இந்திரன் ஒருநாள் அந்தக் காடு வழியாகச் சென்று கொண்டிருந்தான். அவன் அங்கு மிங்கும் விளங்கிய அழகிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டே சென்ருன்.

2. அப்போது கங்கைக் கரையோரமாக ஒரு பெரிய மரத்தைக் கண்டான். அது பட்டுப் போய் இருந்தது. இந்திரன் அம்மரத்தில் இருந்த பொந்து ஒன்றில் ஒரு கிளி இருக்கக் கண்டான். அக்கிளி இளைத்து வாடி இருந்தது.

3. இந்திரன் அக்கிளியைப் பார்த்து, "மூடக் கிளியே! காய் கனிகள் நிறைந்த பசுந்தழை மரங்கள் பல இருந்தும்,

அவைகளை எல்லாம் விட்டுவிட்டுப் பட்ட மரத்தின்மேல் என் வாடி இருக்கிறாய் ?" என்றான்.

4. அதைக்கேட்ட கிளி, இந்திரனைப் பணிந்து, "தேவ ராஜரே! முன்பு இந்த மரம் அழகாகத் துளிர்த்துத் தழைத்துப் பல காய் கனிகளோடு விளங்கியிருந்தது. அப்போது நானும் வேறு பறவைகளும் இதில் வாழ்ந்தோம். ஒருநாள் ஒரு வேடன் விஷ அம்பு ஒன்றை இதன்மேல் எய்தான். அந்த அம்பின் விஷத்தினால் இம்மரம் பட்டுப் போயிற்று. மரம் பட்டுப் போகவே, இங்கு வாழ்ந்திருந்த மற்றப் பறவைகள் வேறு மரங்களை நாடிப் போய் விட்டன. ஆனால், எனக்கு மாத்திரம் இதை விட்டுப் பிரிய விருப்பம் இல்லை" என்றது.

5. அதற்கு இந்திரன், "உனக்கு என் விருப்பம் இல்லை? இங்கே இரையில்லாமல் இறந்து போவாயே!" என்றான்.

6. அதைக்கேட்ட கிளி, "ஆண்டவரே! நான் இம் மரக்கிளைகளில் கட்டியிருந்த கூண்டில் பிறந்தேன்; இதன் இலை நிழலில் வளர்ந்தேன்; இதன் பழங்களைத் தின்றேன்; இதன் கிளைகளின் மேலேயே பறக்கவும் கற்றேன்.

நான் பிறந்தது முதல் இதுமட்டும் வாழ்ந்த இந்த மரம் பட்டுவிட்டாலும், இதை விட்டுப் போக எனக்கு மனம் வரவில்லை'' என்று துக்கத்தோடு கூறிற்று.

7. உடனே இந்திரன் அக்கிளியின் அபிமானத்தைக் கண்டு மகிழ்ந்தான். பின்பு அதை நோக்கி, "அருங்கிளியே! எல்லோரும் உன்னைப் போலவே இரக்கமும் நன்றியறிதலும் உடையவர்களாய் இருக்கவேண்டும். உனக்கு வேண்டும் வரம் கேள் ! தருகிறேன் '' என்றான்.

8. அம்மொழி கேட்ட கிளி பெரிதும் மனமகிழ்ந்து, "சுவாமி! இம்மரத்தை முன் போலவே தழைக்கச் செய்யும். உம்மை நான் என்றைக்கும் மறவாமல் துதிப்பேன்'' என்றது. அப்படியே இந்திரன் அம்மரத்தை முன்போலவே தழைத்தோங்கச் செய்து விட்டுச் சென்றான். கிளியும் அதிலேயே தன் ஆயுட்கால மெல்லாம் வாழ்ந்திருந்தது.

பழமொழி:—"கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.''

அர்த்தம் :—எய்தான்=விட்டான், செலுத்தினன். விருப்பம்=ஆசை. இரக்கம்=உருக்கம். நேசம்=அன்பு. வரம்=விருப்பம், தேவர்களால் கொடுக்கப்படுவது. ஆயுள் =ஆயுசு. துதிப்பேன்=தோத்திரம் பண்ணுவேன்; புகழ்வேன். கேட்டில்=கஷ்டகாலத்தில். உறுதி=மனம் தளராதிருப்பது. கூட்டும்=மறுபடியும் சேர்க்கும். உடைமை =(நாம் இழந்த) செல்வத்தை.

6. விண்ணொளிப் பொருள்கள்

விண்

நீல நிறமாய் ஒளிமயம் பூண்டு விளங்கி
நிலவும் விண்ணே! நீ தான்;
கோல உருவம் அழகுடன் கொண்டாய், கருணை
கொழிக்கும் கடவுள் அருளால்! 1

சூரியன்

நல்ல ஒளிதரும் சூரியனே! உனைப்போல
நலந்தரு வாரும் உண்டோ?
எல்லையில் ஜீவன்கள் பிழைத்திட எங்கும் இனிதாய்
இருளை அகற்றுவாய் நீயே! 2
மரஞ்செடி பூண்டொடு புல் முதல் தாவரம் ஓங்கியே
மாண்பாய் தழைத்திடச் செய்வாய்!
உரந்தரு மண்மேல் அனைத்தும் உலவிட வெப்பமும்
ஒளியும் உவந்தே தருவாய்! 3

சந்திரன்

மாலை வேளை பகலோன் மறைய,
வேலை நடுவில் விளங்கிடு மதியே!
வேலை எவர்க்கும் விதிக்கும் ஈசன்,
சீலம் எல்லாம் சிறக்கச் சொல்வாய்! 4

வளர்வாய், தேய்வாய், வளமாய் நிறைவாயே!
கிளர்வாய், குறைவாய், கெடுவாய், மறைவாயே!
அலைவாய், கதிராய் அழகாய் எழுவாயே!
கலையாய் எவர்க்கும் கருணை விரிப்பாயே! 5

கிரகங்கள்

கோள்மீன் எனவரும் கிரகங்காள்!
நீள்பேர் விண்ணினில் நிலவிடுவீர்!
ஆள்வோன் தன்புகழ் அறிவிக்கவே
வாள்போல் வெள்ளொளி வழங்குவீரே! 6



1. சூரியன். 2. பூமி. மற்றவை சந்திரனும், கிரகங்களும், நட்சத்திரங்களுமாம்.

நட்சத்திரங்கள்

மின்மினி போலும் ஒளியை வீசி மினுக்கிடுவீர் நீரே
நன்முனி வோர் புகழ் நாதன தருளை நலமுறத்தெரிப்பீரே!
மின்மினி யாலே வழிதனை எவரும் வளமாயறியவே
நன்மன முடையார் போலே நின்று நாட்டிடுவீர் நீரே! 7

அர்த்தம் :—விண் = ஆகாயம். ஒளிமயம் = எங்கும் பிரகாசமாயிருப்பது. பூண்டு = அடைந்து. நிலவும் = விளங்கும். கோலம் = அழகு. கொழுக்கும் = பெருக்கி வீசும். எல்லை = அளவு, வரம்பு. ஜீவன் = உயிர். மதி = சந்திரன். பகலோன் = சூரியன். வேலை = சமுத்திரம், தொழில். கிளர்வாய் = மிருவாய். கதிர் = கிரணம். கோள் = கிரகம். மீன் = நட்சத்திரம். வாள் = ஒளி.

---

7. வேளாண்மை

1. நாம் பிறருக்கு நேரும் பசித் துன்பத்தை நீக்குவதே நல்லதாகும். அதுவே எல்லா உதவிகளிலும் சிறந்த உதவி. அந்த உதவிக்கு நெல், கம்பு, சோளம் முதலிய தானியங்கள் வேண்டியிருக்கின்றன. அவைகளை நாம் பெறுவது எப்படி? நாம் நன்ருக நிலத்தை உழுது, திருத்தி, உரிய காலத்தில் தக்கபடி பயிர் செய்ய வேண்டும். அதனுல் நாம் நமக்கு வேண்டிய தானியங்களைப் பெறலாம்; அவைகளை நாமும் உண்ணலாம்; பிறருக்கும் கொடுக்கலாம்.

2. ஆகையால், தானியம் உண்டாவதற்குச் செய்யப்படும் பயிர்த்தொழிலே எல்லோருக்கும் உபகாரம் செய்ய உதவும் தொழில். இக்காரணத்தால் பயிர்த்தொழிலுக்கு வேளாண்மை என்ற பெயர் வந்தது. வேள் என்ருல் உப

காரம் அல்லது கொடை. ஆண்மை என்றால் தலைமை. இதனால், வேளாண்மை என்பது உபகாரம் செய்து தலைமையாகச் சிறந்து இருக்கக் கூடிய தொழில் எனப்படும்.

3. வேளாண்மைத் தொழில் செய்பவன் வேளாளன். வேளாண்மைக்குக் கிருஷி என்ற வேறு பெயரும் உண்டு. கிருஷி என்றால் முயற்சி எனப் பொருள். நாம் செய்யவேண்டிய தொழில் முயற்சிகளில் வேளாண்மைத் தொழில் முயற்சியே மிகவும் மேலானது. ஆதலால், வேளாண்மை முயற்சியின் மேன்மையை விளக்க வேண்டுமென்றே இதற்குக் கிருஷி என்ற பெயரிட்டார்கள்.

4. காலம் அறிந்து தக்கபடி பயிர் செய்கிறவனுக்கு வருஷந்தோறும் செல்வம் வளரும். அவன் தானே எவ்வளவு உண்டாலும் அச் செல்வம் அழியாது; பிறருக்கு எவ்வளவு கொடுத்தபோதிலும் குறைவதில்லை. வேளாண்மையால் வரும் செல்வத்திற்குச் சிறப்பு அதிகம். ஆகையால், நமது முன்னோர்கள், "மேழிச் செல்வம் கோழை படாது" என்றும், "சீரைத் தேடின் ஏரைத் தேடு" என்றும் சொல்லி யிருக்கிறார்கள்.

5. உழுது பயிர் செய்பவன் எவர் உதவியையும் நாடவேண்டியதில்லை. அவனுடைய உதவியையே எல்லோரும் நாடுகிறார்கள். அவன் ஒருவருக்கு ஏவல் செய்ய வேண்டியதில்லை. உண்மையில் மற்றெல்லோரும் அவனுக்கு வேலை செய்பவர்கள்.

6. முற்காலத்தில் வேளாண்மையின் பெருமையை அரசர்களும், புலவர்களும் மிகவும் புகழ்ந்து அதனைச் சிறப்பித்து வந்தனர். ஆகையால், அக்காலத்தில் வேளாண்மை ஊக்கத்தோடு ஓங்கி யிருந்தது. அதன் பலனுய் நாட்டின் வளமும் பெருகிற்று.

7. இதை அறியாமல் இக்காலத்தில் பலரும் இத்தொழிலை இகழ்கிருர்கள். அதைக் கண்டுவேளாளரும் இத்தொழிலைக்கைவிடுகிருர்கள். ஆகையால், நமது நாட்டின் பயிர்வளம் குறைகிறது; அதனுல் செல்வமும் குன்றுகின்றது. ஆனல் பிற நாட்டாரோ, வேளாண்மையை மிகவும் மேன்மையாய் மதித்துப் பாராட்டுகிருர்கள். ஆகவே, அவர்களது செல்வம் ஓங்கி வளருகிறது. அதைக் கண்டாகிலும், நாம் நமது நாட்டிலும் வேளாண்மையை இகழாமல் ஊக்கத்தோடு வளர்க்க முயல வேண்டும். அப்போதுதான் நமது நாடு நலம் அடையும்.

பழமொழி :—“ உழவிற் சிறந்த ஊதியம் இல்லை. ”

அர்த்தம் :—பெறுவது = அடைவது. உரிய = தகுந்த, ஏற்ற. மேழிச் செல்வம் = கலப்பை பிடித்து உழுது பயிர் செய்வதால் உண்டாகும் செல்வம். கோழை படாது = குறைவு படாது. சீரை = செல்வத்தை. தேடின் = தேடுவதனுல். ஏரை = பயிர் இடும் தொழிலை. ஏவல் = வேலை. குன்றுகின்றது = குறைகின்றது. பிறநாட்டார் = அன்னிய நாட்டினர். ஊதியம் = லாபம்.

———

8. உழவர் பழமொழி

1. உழவுக்கு மிஞ்சின தொழிலில்லை.
2. நெற்பயிர் விளை.
3. அண்டை நிலத்தையும் அயல் வீட்டையும் கைவிடாதே.
4. பருவத்தே பயிர் செய்.
5. ஆடிமாதம் தேடி விதை.
6. சித்திரைமாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்.
7. தை உழவு ஐயாட்டுக்கிடை.
8. மாரியல்லது காரிய மில்லை.
9. மின்னல் எல்லாம் பின்னுக்கு மழை.
10. கார்த்திகை மாதம் மழை பெய்தால் கல்லின்கீழ் புல்லும் கதிர் விடும்.
11. சாணுழவு முழ எருவு.
12. அகல உழுவதை ஆழ உழு.
13. ஆழ உழுதாலும் அடுக்க உழு.
14. ஆழ உழுதல் ஆட்டுரத்திற்கும் அதிகம்.
15. ஆற்று மண்ணுக்கு வேற்று மண் உரம்,
16. ஆடு பயிர் காட்டும்; ஆவாரை நெல் காட்டும்.
17. பசு உரத்திலும் பழம் புழுதி நல்லது.
18. மாட்டு எரு புன்செய்க்கு; தழை எரு நன்செய்க்கு.
19. களை எடுத்தவன் விளைவெடுப்பான்.
20. களை எடாப் பயிர் காற்பயிர்.

அர்த்தம்:—ஐயாட்டுக்கிடை=ஐந்து ஆட்டு மந்தை தங்கிய நிலத்தில் விழும் சாணம். மாரி=மழை. மின்=மின்னல். ஆட்டுரம்=ஆட்டினுடைய மலம். விளை=விளைச்சல்.

9. நிலக்கரி

1. முன்னொரு காலத்தில் உலகின் பல பாகங்களிலும் பெரிய காடுகள் நிறைந்திருந்தன. அந்தக் காடுகளில் ஆகாயத்தைத் தொடும் படி வளர்ந்த மரங்களும், செடிகளும், கொடிகளும் அடர்ந்திருந்தன. அக்காடுகளில் உள்ள பெரிய மரங்கள், பெரும் புயல் அடிக்கும் பொழுது கீழே விழுந்து விடும். அவ்வாதி காலத்தில் புயற் காற்று அடிக்கடி அடித்துக் கொண்டிருந்தது. சில சமயங்களில் சில காடுகளில் உள்ள எல்லா மரங்களும் விழுந்துவிடும்.

2. வழக்கம் போல ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த சூரியன் அந்தக் காடுகளைக் கண்டான். உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. "ஐயோ! நான் இந்த மரங்களை யெல்லாம் என் உஷ்ணத்தினுல் ஊட்டி வளர்த்தேன். இந்த மரங்கள் எல்லாம் வெகு அழகாய் என்னைத் தொடும்படி உயர்ந்து வளர்ந்திருந்தன. இப்பொழுதோ, இவை யாவும் காற்றினுல் விழுந்து விட்டன. இவை இப்படியே காடுகளில் கிடந்தால் யாருக்கும் பயன்படாமற் போய்விடும். இவற்றின் உள்ளே என்னுடைய உஷ்ணம் நிறைந்திருக்கின்றது. இந்த மரங்களில் உள்ள என் உஷ்ணத்தை நான் காப்பாற்றுவேன்" என்று நினைத்தான்.

3. உடனே, சூரியன் தன் குழந்தையாகிய பூமியைப் பார்த்து, பூமியே! இந்தக் காடுகளில் உள்ள மரம், செடி, கொடிகளை யெல்லாம் உன் மண்ணினுல் மூடி விடு" என்றான்.

4. பூமி தன் பிதா சொற்படியே அக் காடு

நிலக்கரி ஏற்படுவதற்கு முன் உலகில் பல இடங்களிலும் இதுபோன்ற காடுகள் அடர்ந்திருந்தன.

களை மண்ணினால் மூடிவிட்டது. சில நாட்



கள் செல்லவே, அந்தக் காடுகளை மூடியிருந்த மண்ணின் மேல் மறுபடியும் விதைகள் விழுந்து, மரம், செடி, கொடிகள் முளைத்து, பெரிய காடுகள் தோன்றின; பெரிய மரங்கள் வளர்ந்தன. காற்று மறுபடியும் அந்த மரங்களைக் கீழே தள்ளிவிட்டது. சூரியன் மறுபடியும் அந்த மரங்களையெல்லாம் மண்ணினால் மூடும்படி பூமிக்குக் கட்டளை யிட்டான். இப்படியே பல முறை நடந்துவந்தது. எத்தனையோ காடுகள் ஒன்றின்மேல் ஒன்றாய் மண்ணினால் மூடுண்டன.

5. முடிவில் மனிதர்கள் பூமி யெங்கும் குடிகொண்டு நிறைந்தனர். அவர்கள் பூமியில் கடைசியாக வளர்ந்திருந்த காடுகளைத் திருத்தி நாடு நகரங்கள் அமைத்தனர்.

6. மேலே குவிந்த மண், புதையுண்ட காடுகளை அழுத்த வாரம்பித்தது. மண்ணின் பாரத்தினால் அக் காடுகள் நன்றாய் அழுத்தப்பட்டன; ஆகையினால், அந்தக் காடுகளில் இருந்த மரஞ் செடி



கொடிகள் எல்லாம் தம் உருவத்தை மாற்றிக் கொண்டன. அவை யாவும் பூமியினுள் வெகு தூரம் கரி உருவமாகப் பரந்து கிடந்தன.

7. கரி யுருவமாகப் பூமியினுள் கிடந்த காட்டு மரங்கள் வெகு கால மட்டும் எவருடைய கண்ணுக்கும் தென்படாமல் மறைந்துகிடந்தன. அந்தக் கரிக் காடுகளில் சூரியனுடைய உஷ்ணம் சிறிதுமே கெட்டுப் போகாமல் அப்படியே இருந்தது.

8. பின்பு, ஒருநாள் சில மனிதர்கள் ஒரு காட்டில் ஓரிடத்தை வெட்டித் தோண்டினார்கள். அப்பொழுது அவர்கள் பூமியினுள் புதையுண்ட கரிகளை வெளியே எறிந்தனர். அவர்கள் வேலை செய்து களைத்த

போது, கரையில் குவித்திருந்த கரிக்குவியலின் அருகில் அடுப்பு மூட்டிச் சமைக்க ஆரம்பித்தனர். அடுப்புத் தீ, பூமியினுள்ளிருந்து எடுத்தெறியப்பட்ட கரியுடன் எரிய ஆரம்பித்தது. அதைக் கண்ட மனிதர்கள் மிகவும் அதிசயித்தனர். பூமியினுள்ளிருந்து வந்த கரி தம்முடைய விறகைப் பார்க்கிலும் மிகவும் உஷ்ணமாய் இருப்பதைக் கண்டார்கள். உடனே, அவர்கள் பூமியினுள்ளிருந்து எடுத்த கரியை விறகிற்குப் பதிலாக உபயோகிக்கத் தீர்மானித்தார்கள். நாளடைவில் அந்தக் கரியை எல்லோரும் உபயோகிக்கலானார்கள்.

9. பூமியினுள் புதையுண்ட காடுகள் கரியாக மாறின என்று கண்டோம் அல்லவா? அந்தக் கரிதான் நிலக்கரி. மனிதர்கள் நிலக்கரியினால் அநேக நன்மைகளை அடைகிறார்கள்.

பழமொழி :—"காடு வேந்தால் கரியாகும்."

அர்த்தம் :—அடர்ந்து = நெருங்கி. யோசனை = எண்ணம். மூண்டு = மூட்டப்பட்டு. பாரம் = கனம். தென்படாமல் = தெரியாமல். அதிசயி = ஆச்சரியப்படு.

[பக்கம் 30-ல், கீழிருந்து மேலே பார்ப்பீர்களானால் இவ்வுலகின் வாழ்க்கையில் பற்பல காலங்களில் ஒன்றின் மேல் ஒன்றாய்க் குவிந்த மேற்போர்வை தெரியும். 7-வது அடுக்கில் காண்பதே நிலக்கரியாம்.]



10. நெல்லும் சோளமும்

ஒரு கடையில் பலவகையான தானியங்கள் நிறைந்த கூடைகள் பல இருந்தன. அந்தக் கூடைகள் ஒன்றில் நெல் நிறைய இருந்தது. அதற்கருகாமையில் இருந்த கூடையில் சோள மணிகள் குவிந்திருந்தன. சோளம் தன் சமீபத்திலிருந்த நெல்லை நோக்கி, "நெல்லே! நெல்லே! நீ எந்த ஊரிலிருந்து வந்தாய்?" என்றது.

நெல்:—நான் தஞ்சாவூரிலிருந்துவந்தேன்.

சோ:—அங்கே உன்னை யார் பயிராக்கினர்?

நெல்:—என்னை அருணாசலம் பிள்ளை பயிராக்கினர்.

சோ:—அவர் உன்னை எப்படிப் பயிராக்கினர்?

நெல்:—சொல்லுகிறேன், கேள்.

வாய்க்கால் வெட்டி,
வரப்பு வெட்டி,
சாணமிட்டுச்
சாம்பர் கொட்டி,
உரத்தை யிட்டே
உழுதடித் தாரே.
மரம் அடித்தாரே;
மண்ணு மிட்டாரே.
விதைதனை விதைத்தே
நீர்தனைப் பாய்ச்சி,
நாற்பதாம் நாளில்
நாற்று நட்டார்.
கார் காத்தங்கே
களைதனை எடுத்தார்.
சோ! மழை சொரிந்து
பெருகி நிறைய,
ஜோர் வெயில்
ஜோதியாக வீசிட,
நீரும் உயர, நிலமும்
உயர, வளமும் உயர,
வரப்பும் உயர,
செந்நெல்கதிர் உயரத்
தாள் சாய
நெல்லின் மணியாய்
விளைந்தேன் நானே.
சோ:—பேஷ்! உன்
வாழ்வுஎன்ன ஆனந்த
மான வாழ்வு.



நெல்:—சோளமே! இது மட்டுமா? இன்னும் என்னை என்ன செய்தார்கள்? சொல்லுகிறேன், கேள்.

கதிரும் உயரத்
தாளும் சாய
அரிவாள்தான் கதிர்
அறுத்து வரவே
நெற்போர் இட்டுக்
களம் அடித்தாரே.
பொதியாய் மூட்டை
கட்டி வைத்தார்.
குறையாக் களஞ்சி
யந் தனிலே
கட்டி வைத்தார் கார்
காப்போரே.

சோ:—நீ தஞ்சாவூரிலிருந்து இங்கே எப்படி வந்தாய்?

நெல்:—என்னை மூட்டை மூட்டையாகக் கட்டினார்கள்; ரயில்வண்டியில்ஏற்றி இந்தப் பட்டணத்திற்குக் கொண்டு வந்தார்கள். நீ எந்த ஊரிலிருந்து வருகிறாய்?

சோ:—நான் சேலத்திலிருந்து வருகிறேன்.

நெல்:—உன்னை யார் பயிராக்கினர்?

சோ:—என்னை முத்தையாக் கவுண்டர் பயிராக்கினர்.

நெல்:—அவர் உன்னை எப்படிப் பயிராக்கினர்?

சோ:—எப்படிப் பயிராக்கினரா? கேள்.

வெட்டாந் தரையை வெட்டிக் கொத்தி,
மண்ணுங் கட்டியை உடைத்துத் தள்ளி
சுக்காந் தரையை உழுதடித்தாரே.
சின்னப் பாத்தி கோலி வைத்து
விதைகள் விதைத்து நீரும் பாய்ச்சி,
நாற்றுப் பிடுங்கி அகல நட்டார்.
கதிர்கள் தோன்றி நற்பால் கட்ட,
பரண்கள் கட்டிப் பறவை ஓட்டி
பாது காத்துப் பாடு படவே
சோள மணியாய் விளைந்தேன்
ஏழை எளியார் உண்ண வென்றே.

நெல்:—உன்பாடு அப்படியா யிருந்தது? அப்புறம் என்ன செய்தார்களோ?

சோ:—அப்புறம் என்ன செய்தார்கள்? என்னையும் மூட்டையாகக் கட்டி ரெயில் வண்டியில் ஏற்றி இந்த ஊருக்கு அனுப்பினர்கள்.

நெல்:—என்ன வேடிக்கை! நாம் எங்கே விளைந்தோம்? முடிவில் எங்கே வந்து சேர்ந்திருக்கிறோம்?

சோ:—ஆமாம்; எல்லாம் கதையாகத்தான் இருக்கிறது.

பழமொழி :—“ நெல் இருக்கப் போன்.”

அர்த்தம் :—ஜோதி = பிரகாசம். வளம்=செழிப்பு. தாள்=நெல்லைத் தாங்கும் தண்டு. களஞ்சியம் = நெல் சேர்த்து வைக்கும் இடம். பரண்=பறவைகளை ஓட்டுவதற் காக மனிதர் நிற்கிற உயரமான மேடை. கோலி=அமைத்து, வகுத்து. ஜோர் வெயில்=நல்ல வெயில்.

---

11. அதிவீரராம பாண்டியர்

1. வெகு காலத்திற்கு முன் திருநெல் வேலி ஜில்லாவிலே தேன்காசி என்னும் நகரில் அதிவீரராமர் என்ற பாண்டிய மன்னர் செங் கோல் செலுத்தி வந்தார். அவரது தமையனார் வரதுங்க பாண்டியர் என்பவர் திருக்கருவை என் னும் பதியில் அரசாண்டு வந்தனர். இவ்விரு அரசர்களும் மதுரையில் ஆண்ட பாண்டிய மன்னருக்கு அடங்கி ஆறிலொரு பங்குகடமை செலுத்தி வந்தனர்.

2. அதிவீரராம பாண்டியரும் வரதுங்க பாண்டியரும் ஸரஸ்வதியின் அநுக்கிரகத்தி னால் தென் மொழியிலும் வட மொழியிலும் நன்கு தேர்ச்சி அடைந்து, தமிழில் சிறந்த பாடல்கள் பாடும் திறமை பெற்றனர். இவர் களுள் வரதுங்க பாண்டியர் சிவபெருமானிடத் தில்இணையற்ற அன்பு கொண்டு எப்பொழுதும் அவரைப் புகழ்ந்தே இனிய பாடல்கள் பாடி வரலாயினர். அதிவீரராம பாண்டியரோ உலக விஷயங்களில் மிக்க விருப்பம் கொண்டு, உலக இன்பங்களைப் புகழ்ந்து பாடிவந்தார்.

3. அதிவீரராம பாண்டியர் தம்முடைய கவித்திறமையைக் காட்டத் தமிழில் நைடதம் என்றொரு நூலை எழுதினார். அந்நூல் நள மகாராஜனுடைய கதையைச் சொல்லும். அதில் அநேக பாடல்கள் உலக இன்பங்களைச் சிறப்பித்துக் கூறுகின்றன. அவர் அந்த நூலைப் பாதி பாடி முடித்ததும் தமது தமயனாரிடம் காட்டினார். அதைக் கண்ட வரதுங்க பாண்டியர், "தம்பீ! சிவபிரானைப் புகழ்ந்து பாடாமல் சாதாரண மனிதனைப் புகழ்ந்து பாடினையே" என்று துக்கத்தோடு சொன்னார்.

4. அதைக்கேட்ட பிறகு, அதிவீரராம பாண்டியருக்கு அந்நூலை முன்போலச் சிறப்பாகப் பாடுவதில் ஊக்கம் செல்லவில்லை. எனினும், எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு ஒருவாறு பாடி முடித்தார். பின்பு, அதைத் தமது மதனியாருக்குக் காட்டினர். வரதுங்க பாண்டியருடைய மனைவியார் செந்தமிழைச் சந்தேக விபரீதமின்றிக் கற்றவர். அவ்வம்மையார் அதிவீரராம பாண்டியர் பாடிய நூலைப் படித்துப் பார்த்துவிட்டு, "இதென்ன? வேட்டை நாய் காட்டிற்குச் செல்லும்போது உற்சாகத்தோடு விரைந்து சென்று, திரும்பி வரும்போது இளைத்து வருவதை ஒத்திருக்கிறதே" என்றார்.

. அதைக்கேட்டவுடனே அதிவீரராம பாண்டியருக்குப் பெருங்கோபம் வந்து விட்டது. அவர் உடனே தென்காசிக்குச் சென்று

ஒரு பெரும் படை திரட்டிக்கொண்டு தமது தமையனுரோடு யுத்தம் செய்யப் புறப்பட்டார். தம்பியார் படையெடுத்து வருவதை அறிந்த வரதுங்க பாண்டியர் ஒரு ஓலையில், "என்னருமைத் தம்பியே! நீ கர்ணனையும், இராவணனையும், அர்ச்சுனனையும் உன் முன்மாதிரியாகக் கொள்ளாதே. ஸ்ரீராமனையும், பரதனையும் உனக்கு முன்மாதிரியாகக் கொள்" என்று பொருள்பட ஒரு பாட்டு எழுதி அனுப்பினுர்.

6. அதிவீரராம பாண்டியர் அந்தப் பாட்டைப் படித்துப் பார்த்தார். உடனே தமது தமையனுரின் சிறந்த குண விசேஷங்கள் அவருக்குத் தெற்றெனப் புலப்பட்டன. அவர் கோபம் தணிந்து தமது தமையனுரை வணங்கி மன்னிக்கும்படி கேட்டார். தமையனுர் அவரை அன்போடு மன்னித்தார். பின்பு, அதிவீரராம பாண்டியர் தமது தமையனுரை மகிழ்விக்க, வெற்றிவேற்கை என்னும் இனிய நீதி நூலைப் பாடினுர்.

---

12. வெற்றிவேற்கை I

கல்வி கற்பித்தவர்

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.

அழகாவன

கல்விக் கழகு கசடற மொழிதல்.

அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.

செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.

வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்.
மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை.
வணிகர்க் கழகு வளர்பொருள் ஈட்டல்.
உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்.
மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
பெண்டிர்க் கழகு எதிர்பேசா திருத்தல்.

அர்த்தம் :—எழுத்து அறிவித்தவன்=இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கொடுத்தவன். இறைவன் ஆகும்=கடவுளுக்கு ஒப்பாவான். கல்விக்கு=படிப்புக்கு. கசடு அற=குற்றம் இல்லாமல். மொழிதல்=சொல்லுதல். அறிஞர்=அறிவுடையவர்கள். கற்று உணர்ந்து=யாவற்றையும் படித்துத் தேர்ந்து. அடங்கல்=அடக்கம் உடையவர்களாய் இருப்பது. செல்வர்க்கு=நிரம்பப் பணம் உடையவர்களுக்கு. செழுங்கிளை=பல உறவினர்களை. தாங்குதல்=காப்பாற்றுதல். வேதியர்க்கு=பிராமணர்களுக்கு. வேதமும்=வேதசாஸ்திரங்களைப் படிப்பதும். ஒழுக்கமும்=நல்ல நடத்தை உடையவர்களாயிருப்பதும். மன்னவர்=அரசர்கள். செங்கோல் முறைமை=நீதி தவறாமல் செங்கோல் செலுத்தும் ஒழுங்கு. வணிகர்=வர்த்தகர். வளர்பொருள்=மேலும் மேலும் வளர்ந்துகொண்டிருக்கும் செல்வத்தை. ஈட்டல்=சம்பாதித்தல். உழுது=ஏர்பிடித்து உழுது பயிர் செய்து உண்ணும். ஊண்=சாப்பாட்டை. விரும்பல்=ஆசைப்படுதல். வரும்பொருள்=இனிவரும் காரியத்தை. உரைத்தல்=சொல்லுதல். தந்திரிக்கு=படைத்தலைவனுக்கு. தறுகண்=பயப்படாது இருப்பதாகிய. ஆண்மை=வீரம். உண்டி=உணவு. உண்டல்=புசித்தல். பெண்டிர்க்கு=பெண்களுக்கு. எதிர்=எதிராக. பேசாது=பேசாமல்.

13. தையல் யந்திரம்

1. வெகு காலமாக மனிதர்கள் கையினுலேதான் சொக்காய், குடுத்துணி, பாவாடை, காற்சட்டை முதலான உடைகளைத் தைத்து வந்தார்கள். ஆனுல், கையினுல் ஒரு சொக்காய் தைப்பதற்கு வெகு நேரம் செல்லும். ஒரு ஊரில் உள்ள ஜனங்கள் எல்லோரும் சொக்காய் போட்டுக் கொள்வதானுல், அவர்கள் எல்லோருக்கும் சொக்காய்கள் தைக்க எவ்வளவு நேரமாகும்? அப்படியானுல், அந்த ஊரில் பல தையற்காரர்கள் வெகு நேரம் தைக்கவேண்டுமல்லவா? ஆகவே, அநேக தையற்காரர்கள் இருந்தாலும் ஜனங்களுடைய சௌகரியப்படி அவர்கள் தைக்கமுடியாது.

2. நம்முடைய நாட்டில் முற்காலங்களில் ஜனங்கள் சொக்காயும் சட்டையும் போட்டுக் கொள்ளவில்லை. அவர்கள் சாதாரணமாக வேஷ்டி கட்டிக்கொள்வார்கள்; உடம்பை ஒரு அங்க வஸ்திரத்தினுல் மூடிக்கொள்வார்கள். குளிர்ந்த தேசங்களில் வசிப்பவர்கள் அப்படிச் செய்ய முடியுமா? அவர்கள் எப்பொழுதும் தங்கள் உடல் முழுவதையும் மூடிக்கொள்ள வேண்டும். அப்படி மூடிக்கொள்ள வேண்டுமானுல், அவர்கள் சொக்காயும் காற் சட்டையுமே அணிய வேண்டும்.

3. சொக்காயும், காற் சட்டையும் அணிகிற ஜனங்கள் வாழும் நாட்டில் அநேக தையற்காரர்கள் இருப்பார்கள். என்றுலும், அந்தத் தையற்காரர்களால் ஜனங்களுடைய சௌகரி

யப்படி சொக்காய்களும், பாவாடைகளும், காற் சட்டைகளும் தைத்துக் கொடுக்க முடியவில்லை. ஆகையால், அவர்கள் சீக்கிரமாகத் தைப்பதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். பலர் பல கருவிகள் உண்டு பண்ணினார்கள்; என் றாலும் சீக்கிரமாய்த் தைக்க முடியவில்லை.

4. இப்படி இருக்கும்பொழுது லண்டன் மா நகரில் 1790 ஆம் வருஷம் தாமஸ் ஸேயிண்டு என்பவன் தோல் தைக்கும் கருவி ஒன்றை நிரு மித்தான். ஆனால் அது பழக்கத்தில் வரவில்லை. என்றாலும், அதுதான் முதன் முதலில் உண்டு பண்ணப்பட்ட தையல் யந்திரமாகும்.

5. அதன் பின்னர், பலர் புதிது புதிதான முறைகளில் தையல் யந்திரங்கள் உண்டுபண்ண முயன்றனர். அவர்களுள் ஹோவ் என்பவன் மிகவும் சீர் திருத்தின ஒரு தையல் யந்திரத்தை உண்டுபண்ணினான். அவன் அதை 1867 ஆம் வருஷம் பாரிஸ் பொருட் காட்சி சாலைக்கு அனுப்பினான். அதைக்கண்ட பிரஞ்சு அரசாங் கத்தார் அவனுக்குத் தங்கப் பதக்கம் பரிசு அளித் தனர். அதே சமயத்தில் அல்லன் வில்சன் என்பவனும் ஹோவினுடைய யந்திரத்தைப் போல ஒரு யந்திரம் செய்தான். ஆனால் அந்த யந்திரம் கெட்டுப்போய்விட்டது. அப்போது அவன் அதைப் பழுதுபார்க்க ஒரு யந்திரக்கார னிடம் அனுப்பினான்.

6. அந்த யந்திர ஆலையில் திறமை வாய்ந்த ஒரு யந்திரக்காரன் இருந்தான். அவன் பெயர் ஐஸக் ஸிங்கர். அவன் அந்த யந்தி

ரத்தைப் பார்த்து, "நான் இதைப் பார்க்கிலும் சிறந்த ஒரு யந்திரம் செய்ய முடியும்" என்று சொல்லிக் கொண்டான். உடனே ஸிங்கர், மற்றவர்களெல்லோரும் செய்த யந்திரங்களைப் பார்க்கிலும் மிகவும் நேர்த்தியான ஒரு யந்திரம் செய்தான். வெகு சீக்கிரம் ஸிங்கருடைய யந்திரம் நாடெங்கும் பரவலாயிற்று. முதலில் ஏழையாயிருந்த ஸிங்கர் வெகு சீக்கிரம் பணக்காரனானன். அவன் இருபது வருஷங்களுக்குள் கோடீச்வரனாய் விட்டான். இப்பொழுது எங்கே பார்த்தாலும் ஜனங்கள் அவனுடைய ஆலையில் செய்த தையல் யந்திரங்களையே அதிகமாய் உபயோகிக்கிறார்கள்.

7. நீங்கள் படத்தில் உள்ள தையல் யந்திரத்தைப் பாருங்கள். இந்த யந்திரத்தின் மேல் ஆங்கில எழுத்தில் "ஸிங்கர்" என்று எழுதியிருக்கிறது. ஸிங்கர் தையல் யந்திரங்களினால் வெகு விரைவாகச் சொக்காய், காற் சட்டை, பாவாடை முதலிய உடைகள் தைக்கலாம்.



தையல் யந்திரம் இரண்டு வகைப்படும். ஒன்றைக் காலால் ஓட்டலாம்; மற்றொன்றைக் கையால் சுற்றி ஓட்டலாம். நீங்கள் ஒரு தையற்காரருடைய கடைக்குப் போகிற பொழுது, தையல் யந்திரத்தைத் திறந்து காட்டச் சொல்லுங்கள். தையற்காரரிடம், "அதென்ன? இதென்ன?" என்று கேளுங்கள். முடிவில் அவர் எப்படி யந்திரத்தை ஓட்டுகிறார் என்று கவனியுங்கள். நீங்களும் அவருடைய யந்திரத்தைப்போல மாதிரி ஒன்று செய்து உங்கள் பள்ளிக்கூடத்தில் வையுங்கள்.

அர்த்தம்:—சௌகரியம் = வசதி. நிருமி = உண்டு பண்ணு. முறை=ஒழுங்கு. பொருட் காட்சி சாலை= அருமையான பொருள்களைப் பலரும் பார்க்கும்படி வைத்திருக்கும் இடம். பரிசு=வெகுமதி. அளித்தனர்=கொடுத்தனர்.

---

14. கடமை அறியாத துறவி

1. முன்னொரு காலத்தில் கொங்கண தேசத்தில் பிரும்மசாரி ஒருவன் இருந்தான். அவன் பெயர் கௌசிகன். அவனுடைய பெற்றோர்கள் மிகவும் வயது சென்ற கிழவர்கள். அவர்கள் பரம ஏழைகள். கௌசிகனுக்குக் கலியாணமாகாத மூன்று சிறு சகோதரிகள் இருந்தனர்.

2. கௌசிகன் ஒரு முனிவரை அடுத்து அவரிடம் சகல சாஸ்திரங்களையும் கற்றான். அவனுக்கு உலகத்தின் மேல் ஆசை அற்று விட்டது. அவன், தன் குருவைப்போலவே ஒரு துறவியாக வேண்டும் என்று நினைத்



தான். ஆகையால், காட்டில் சென்று, அவன் கடுந்தவம் புரியத் தீர்மானித்தான்; தன் பெற்றோருக்கும், சகோதரிகளுக்கும், செய்ய வேண்டிய கடமைகளை மறந்தான்.

3. அவன் காட்டில் நெடு நாட்களாகத் தவம் செய்து வந்தான். இங்ஙன மிருக்கையில், ஒருநாள் அவன் தவம் செய்து கொண்டிருந்த மரத்தின் மீதிருந்த ஒரு கொக்கு இட்ட எச்சம் அவன் தலைமேல் விழுந்தது. அவன் பெருங் கோபத்தோடு முகத்தை ஏறெடுத்துப் பார்த்தான். அப்போது, மரத்திலிருந்த கொக்கு எரிந்து சாம்பலாய் விட்டது. அதைக் கண்ட கௌசிகன், தான் மிக்க தவ வன்மை அடைந்ததாக எண்ணிக் காட்டை விட்டு நாட்டிற்கு வந்து ஊர் ஊராய்த் திரியலானான்.

4. அவன் ஒருநாள் மைலாப்பூரில் திருவள்ளுவருடைய வீட்டிற்கு வந்து பிச்சை கேட்டான். அப்பொழுது, திருவள்ளுவரின் மனைவியாகிய வாசுகி அம்மாள் தன் கணவருக்கு அன்னம் பரிமாறிக் கொண்டிருந்தாள். அதனாலே, அவள் வெகு சீக்கிரம் வந்து சந்நியாசிக்கு உபசாரம் பண்ணக் கூடாமற் போயிற்று.

5. அதை அறியாத சந்நியாசி, அந்த உத்தமி தன்னை அவமதித்தாள் என்று பெரும் கோபத்தோடு, "இங்கே வந்திருப்பவன் யார் என்று அறியவில்லையோ? பேதாய்!" என்று கேட்டான்.

6. அதற்கு வாசுகி அம்மாள், வீட்டினுள் இருந்தபடியே, "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?" என்று சொன்னாள்; அவள் தன் கணவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளையெல்லாம் செய்து முடித்தாள்; பின்பு, சந்நியாசியை உபசரிக்க

வந்தாள். அப்போழுது சந்நியாசி, "அம்மணி, நான் கொக்கை எரித்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றான்.

7. அவள், "நீ மிதிலா நகரத்திற்குச் சென்று, அங்கு கசாப்புக்கடை வைத்துக் கொண்டிருக்கும் தருமவியாதன் என்பவனைக் கேள். அவன் இதற்கு மறுமொழி சொல்லுவான்" என்றாள்.

8. சந்நியாசி மிதிலைக்குச் சென்று வாசுகி அம்மாள் சொன்ன கசாப்புக் கடைக்காரனைக் கண்டான். அவன் சந்நியாசியை ஓர் ஆசனத்திலே இருக்கச் செய்தான். பின்பு, அவனைச்

சிறிதுமே கருதாமல் முன்போலவே வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தான்.

9. சந்நியாசி 'மாமிசம் விற்கும் இந்த மனிதனு நமக்கு உண்மையைச் சொல்லப்போகிருன்,' என்று எண்ணிக்கொண்டிருந்தான்.

10. கசாப்புக்கடைக்காரன், தன்வேலையை



எல்லாம் முடித்துவிட்டு, சந்நியாசியை இட்டுக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்ருன். அவன் அங்கு, கபோதிகளாயிருந்த தாய் தந்தையர்களுக்கு உணவு முதலியவை கொடுத்தான்; அவர்களைப் படுக்கையில் கிடத்திக் கால் பிடித்துத் தூங்கப் பண்ணிஞன்; பின்பு, திரும்பிவந்து விருந்தாக வந்த சந்நியாசிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை யெல்லாம் செய்து முடித்தான்.

11. சந்நியாசி கசாப்புக் கடைக்காரனைப் பார்த்து, நான் தவம் செய்யச் சென்றது முதல் எல்லாக் கதையையும் கசாப்புக் கடைக்காரனிடம் சொன்ஞன். முடிவில், "சகோதரனே! நீ எனக்குக் கற்பிக்கக் கூடிய உண்மை ஏதாவது உண்டோ?" என்ருன்.

12. அதற்குக் கடைக்காரன், "ஐயனே! நான் கல்வி யறிவில்லாத மூடன்; எல்லோரும் நான் செய்கிற தொழிலை இழிவான தொழில்

என்று நினைக்கிறார்கள். என்றாலும், என் பெற்றோர்கள் எனக்குக் கொடுத்த வேலையானதால், இதுவே மேலானது என்று நான் செய்து வருகிறேன். கடை அடைத்து வீட்டிற்கு வந்ததும் என் பெற்றோர்களுக்குச் சகல பணிவிடைகளும் செய்கிறேன். இதைத் தவிர நான் வேறொன்றையும் அறியேன். நான் தங்களுக்கு என்ன உண்மை கற்பிக்கக் கூடும்?'' என்றான்.

13. அப்பொழுது சந்நியாசி மிகவும் துக்கித்து, அவனிடம் விடை பெற்றுக் கொண்டு, தன் தேசம் நோக்கிப் புறப்பட்டான். போகும் போது, வாசுகி அம்மாளையும், கசாப்புக் கடைக்காரனையும் குறித்துச் சிந்தித்துக்கொண்டே வந்தான். வருகையில் அவன், 'ஆ! நான் இப்பொழுது உண்மையை உணர்ந்தேன். எவன் ஒருவன் அன்பிலே நிலைத்துத் தன் கடமையைச் சரிவரச் செய்து முடிக்கின்றானோ அவன் ஆயிரம் துறவியினும் சிறந்தவன். நான் என் பெற்றோர்களை வயது சென்ற காலத்திலே தன்னந் தனிமையாக விட்டுத் துறவி ஆனேன். என் சகோதரிகளுக்குச் செய்ய வேண்டியவைகளையும் செய்யவில்லை. அவர்கள் நிலைமை என்னவாயிற்றோ?' என்று ஏக்கம் கொண்டான்; தன் ஊர் சென்று அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்து வந்தான்.

அர்த்தம் :—பிரும்மசாரி=கலியாணம் ஆகாதவன். அற்றுவிட்டது=நீங்கிவிட்டது. துறவி = உலகத்தில் உள்ள எல்லா ஆசைகளையும் விட்டவன். கடும்தவம்=கஷ்டமான நோன்பு. உத்தமி=சிறந்த ஸ்திரீ. பேதாய்=புத்தி இல்லாதவளே. கபோதி=குருடன்.

15. புதுக்கோட்டை ராஜ்யம்

1 தஞ்சாவூருக்கும் திருச்சினுப்பள்ளிக்கும் தெற்கே புதுக்கோட்டை ராஜ்யம் இருக்கிறது. இது ஒரு தனித் தமிழ் ராஜ்யம். இது கோனுடு, கானுடு என்ற இரு பகுதிகளை உடையது. இதை ஒரு சுதேசத் தமிழ் மன்னர் ஆண்டு வருகிருர்.

2. இவ்வரசர் குலத்திற்குத் தொண்டமான் என்னும் பட்டப் பெயர் வழங்கி வருகிறது. இக்குலத்து அரசர்கள் சுதேச அரசர்களுக்கு உரிய எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிறார்கள். இவர்கள், மிகவும் அன்போடும் கருணையோடும் தங்கள் குடிகளை ஆண்டு வருகிறார்கள். தங்கள் ராஜ்யத்தில் கல்வியைப் பரவ வைப்பதே இவர்களுடைய முழு நோக்கம். ஆகையால், இவர்கள் தங்கள் ஆதரவில் ஒரு சிறந்த கல்லூரியும் (சர்வ கலா சாலை) பல கல்விச் சாலைகளும் அமைத்திருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சியின் பொருட்டு ஒரு கழகமும் அமைத்திருக்கின்றனர். தக்க முயற்சியோடு தமிழ் அறிவைப் பரவச் செய்து, தமிழில் வல்லவர்களுக்குப் பரிசு அளித்து அவர்களை உற்சாகப்படுத்தி வருகிறார்கள். தொழில் முறைகளிலும், வியாபாரங்களிலும் ஈடுபட்டுள்ள தங்கள் குடிகளுக்கு வேண்டிய உதவியும் செய்கிறார்கள். ஆகையால், புதுக்கோட்டை ராஜ்யம் வளர்பிறைச் சந்திரன்போல் செல்வத்திலும், புகழிலும் மேன் மேலும் ஓங்கி வளர்ந்து வருகிறது.

3. இவ்வளவு சிறப்புடைய புதுக்கோட்டை ராஜ்யம் முதலில் ஏற்பட்ட கதையை நீங்கள் அறிய விரும்புகிறீர்களல்லவா ?

4. மதுரையில் ஆண்ட நாயக்க மன்னர்களுடைய வலிமை வரவரக் குறைந்து கொண்டே வந்தது. அப்பொழுது, அவர்கள்கீழ் அடங்கியிருந்த பாளையப்பட்டுகளெல்லாம் பிரிந்து போயின. அப்பாளையப்பட்டுகளை ஆண்டவர்

கள் கள்ளர், மறவர் முதலியவர்களாம். அவர்களில் ஒருவர் இராமநாதபுரத்தில் ஆண்ட விஜய ரகுநாத சேதுபதி என்னும் கிழவர். அவர் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர். அவர் சிறந்த வீர தீரராயிருந்தபடியால் மற்ற பாளையப் பட்டா தார்களை யெல்லாம் வென்று அடக்கி, நாயக்க மன்னருக்கு உதவி செய்தார். ஆகையால், சேது பதி மிகவும் அதிகாரம் உடையவரானார்.

5. கிழவராகிய சேதுபதி தம் மைத்துனர் ஒருவருக்குத் தம் நாட்டில் ஒரு பாகத்தைக் கொடுத்தார். அவர் ஒரு வளமான இடத்தில் காடு வெட்டி நாடாக்கி, ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டு ஆண்டு வந்தார். இக் கோட்டையே புதுக்கோட்டையாம். அக்கோட்டையைச் சூழ ஒரு பெரிய பட்டணம் உண்டாயிற்று.

6. முன்னொரு சமயம் புதுக்கோட்டையை ஆண்ட தொண்டமான் ஆங்கிலேயருடைய போரில் பேருதவி செய்தார். அவர் அப்படி உதவி செய்திராவிட்டால் ஆங்கிலேயர் தென்னிந்தியாவை இழந்திருப்பார்கள். அதனால், நம் நாட்டு ஆட்சி நிலையும் வேறுபட்டிருக்கும். ஆகையால், செய்த நன்றி மறவாத ஆங்கிலேயர்கள், புதுக்கோட்டைத், தொண்டமான் அரசர்களது உரிமையை என்றும் காப்பாற்றி வருவதாக வாக்களித்தார்கள். அவ்வாறே, இன்றும் தொண்டமான் அரசர்கள் புதுக்கோட்டை ராஜ்யத்தை எல்லா உரிமையோடும் ஆண்டு வருகிறார்கள். இப்போது இராஜ கோபாலத் தொண்டமான் என்னும் அரசர் ஆண்டுவருகிறார்.

அர்த்தம் :—பகுதி=பிரிவு. உரியது=சொந்தமானது. வழங்கி வருகிறது=வழக்கத்தில் இருந்து வருகிறது. கழகம்=சங்கம். பரிசு=இனாம். அளித்து=கொடுத்து. வென்று=ஜயித்து. போர்=சண்டை. முற்றுகை=பகைவருடைய கோட்டையை வளைத்துக்கொள்வது.

---

16. வெற்றிவேற்கை II

பெருமை சிறுமை

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்,
ஒருவற் கிருக்க நிழலாகாதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்,
நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழல் ஆகும்மே.

ஆதலால்

பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்.
உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்.

அர்த்தம்:—தேம்படு=இனிமை பொருந்திய. திரள்=திரண்ட. பழத்து=பழத்தினது. ஒருவிதை=ஒரு பெரிய விதையானது. வான்=ஆகாயத்தை. உற=தாவ. ஓங்கி=உயர்ந்து. வளம்=செழுமை. பெற=உண்டாக. தெள்ளிய=தெளிந்த. நீர்க்கயத்துள்=நீரினை உடைய குளத்திலுள்ள. சினையினும்=முட்டையைப் பார்க்கிலும். நுண்ணிதே=சிறியதே. ஆயினும்=ஆனாலும். அண்ணல்=பெருமை பொருந்திய. அணி=அழகிய. புரவி=குதிரையும். ஆள்=காலாட்படைகளும். பெரும்=பெரிய. உற்றோர்=உறவினர்.

17. சிவாஜி

1. இந்தியாவின் சரித்திரம் படிக்கும் மாணக்கர்கள் எல்லோரும் சிவாஜியை நன்கறிவார்கள். அவர் 1627ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி மஹாராஷ்டிர தேசத்தில் ஜின்னர் என்னும் கோட்டையில் பிறந்தார். அவருடைய தந்தையார் ஷாஜி என்பவர்; அவரது தாய் ஜீஜிபாய் என்பவள். சிவாஜிக்கு ஒரு சகோதரரும் இருந்தார்.

2. ஷாஜி மிகவும் சிறந்த போர்வீரர். அவர் பீஜப்பூர் ராஜ்யத்தில் மிக்க செல்வாக்குடைய ஒரு பிரபுவாய் விளங்கினர். அவர் பல போர்களில் பீஜப்பூர், அகமத்நகர் அரசர்களுக்கு உதவி செய்து வந்தார். ஆகையால், அந்நாட்டு மகமதிய மன்னர்கள் அவருக்குப் பூனவையும் அதைச் சூழவுள்ள சிறு நாட்டையும் ஜாகிராகக் கொடுத்திருந்தனர்.

3. ஷாஜி, சுல்தான்களுக்காக ஓயாமல் யுத்தம் செய்ய வேண்டியிருந்தமையால், தமது மனைவியையும் மக்களையும் தாதாஜி என்ற பிராமண நண்பரோடு பூனவிற்கு அனுப்பி விட்டார். அங்கே ஜீஜிபாயும் பிள்ளைகளும் தாதாஜியின் பாதுகாப்பில் வாழ்ந்து வந்தார்கள்.

4. தாதாஜி சிவா

ஜியை மிகவும் அன்போடு காத்து, அவருக்கு அறிவு, அன்பு, அருள், அடக்கம், துணிவு, ஊக்கம் முதலிய நற்குணங்களைப் புகட்டி வந்தார். அதற்கேற்றபடி அவ்வப்போது இராமாயண பாரதக் கதைகளையும் புராணக்கதைகளையும் கற்பித்து வந்தார். அக்கதைகளைக் கேட்டு வந்த சிவாஜிக்குத் தாமும் அவைகளில் கூறிய வீரர்களைப் போல் சிறந்து விளங்க வேண்டுமென்ற அவாவும் நோக்கமும் உண்டாயின. ஜீஜிபாய் பல தருணங்களில் ராஜபுத்திர வீரர்கள், யாதவ வீரர்கள் முதலான பல இந்திய வீரர்களுடைய சரித்திரக் கதைகளைத் தன் மகனுக்குச் சொல்லி வந்தாள்; மகமதியரால் அழிக்கப்பட்ட இந்து ராஜ்யத்தைப் பழையபடி நிலை நிறுத்த வேண்டுமெனக் கூறி, சிவாஜியின் சிறு உள்ளத்தை எழுப்பினாள். இவ்வாறு சிவாஜியும் சகல நற்குணங்களும் நிறையப் பெற்று, முடிவில் மகாவீரராய் விளங்கினார்.

5. சிவாஜி ஒரு பெரிய ராஜ்யத்தை நிலைநாட்ட வேண்டுமென்று தீர்மானித்தார். அதற்காக அவர் சிறு வயது முதற்கொண்டே போர் முறைகளில் பழகி வந்தார். அவர் வாலிபரானதும் ஒரு பெரும் படை திரட்டிக்கொண்டு பகைவர்களாகிய மகமதிய மன்னர்களைப் பல முறை எதிர்த்து வெற்றி பெற்றார்; முடிவில் மஹாராஷ்டிர ராஜ்யத்தை ஏற்படுத்தினார். அவர் இராஜகிரி என்னும் பலமான ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டு, அதில் கி. பி. 1674 ஆம் வருஷம் முடி சூடி மகாராஜாவானார்.

6. சிவாஜியின் வீரத்தையும் அருமையான குணங்களையும் பற்றிப் பல கதைகள் உள. அவை யாவும் படிக்கப் படிக்க வெகு இரசமாய் இருக்கும். அக் கதைகளில் ஒன்று அவருக்கு ஸ்ரீராம பக்தர்களிடம் இருந்த பேரன்பையும் பெரும் நம்பிக்கையையும் காட்டுகின்றது.

7. சிவாஜியின்காலத்தில் இராமதாஸ் என்ற மகா பக்தர் ஒருவர் இருந்தார். அவர் ஸ்ரீராமனிடத்தில் அளவில்லாத அன்பு செலுத்தி வந்தார். மகமதிய அரசர்களும் அவரைப் பணிந்து வணங்கி மரியாதை செய்து வந்தனர். சிவாஜி இராமதாஸரிடம் அளவற்ற அன்பும் பக்தியும் உடையவராயிருந்தார்.

8. இராமதாஸர் சத்தாரா ஜில்லாவில் பரலி என்னும் ஊரில் தங்கியிருந்தார். அவர் ஒரு நாள் சிவாஜி மன்னரிடம் பிக்ஷை கேட்க வந்தார். அவரைக் கண்ட சிவாஜி உடனே தம்முடைய சிங்காதனத்தை விட்டெழுந்தார்; தமது கிரீடத்தை எடுத்து இராமதாஸருடைய காலில் வைத்தார்; பின்பு, அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்; அவர் இராமதாஸரைப் பார்த்து, "ஸ்வாமி! நான் இந்த மகாராஷ்டிர ராஜ்யத்தையே தங்களது திருவடிகளில் வைத்து விட்டேன். தாங்கள் என் ராஜ்யத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று மன்றாடினார்.

9. இராமதாஸர் சிவாஜியின் அன்பைக் கண்டு மிகவும் மனமகிழ்ந்தார்; ஸ்ரீராமனைப் புகழ்ந்தார். பின்பு சிவாஜியை நோக்கி, "என்

அருமைச் சீஷனே! நான் இந்த ராஜ்யத்தை உனக்கே திரும்பக் கொடுக்கிறேன். நீ இன்று முதல் இதை ஸ்ரீராமனின் ராஜ்யமாகக் கருதி வரவேண்டும். நீ இதைப் பத்திரமாய்க் காப்பாற்றி வரவேண்டுமென்று ஸ்ரீராமன் உனக்குக் கட்டளை யிடுகிறார். இதற்கு அடையாளமாக உனக்கு இந்தப் பாகவத சண்டாவைக் கொடுக்கிறேன்'' என்றார். உடனே காவி நிறமான ஒரு கொடியை சிவாஜியிடம் கொடுத்தார். சிவாஜி அதை வெகு வணக்கத்தோடு வாங்கிக்கொண்டு இராமதாஸரைப் பணிந்தார். இராமதாஸர் சிவாஜியிடம் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டார். சிவாஜி அன்று முதல் அந்தக் கொடியையே தமது தேசத்துச் சின்னமாக உபயோகித்து வந்தார்.

பழமொழிகள் :—"தொண்டர்கள் அன்பன் துணைக்கு நிற்பவன்.''

அர்த்தம் :—செல்வாக்கு = தடையின்றிச் சொல்லும் வார்த்தை. புகட்டி = அறிவு கற்பித்து. அவா = ஆசை. தருணம் = சமயம். உள்ளம் = மனம். திரட்டி = சேகரித்து, கூட்டி. அளவற்ற = அளவில்லாத. சாஷ்டாங்கமாக = உடம்பின் எட்டு பாகங்களும் பூமியில் படும்படி விழுந்து வணங்குதல். மன்றாடினர் = கெஞ்சிக்கேட்டார். சின்னம் = அடையாளம். சண்டா = கொடி. தொண்டர்கள் = அடியார்கள்.

---

18. காகிதம்

1. நாம் புத்தகங்களைப் படித்து அறிவை வளர்க்கிறோம். அறிவு வளர்ச்சிக்கு அச்சடித்த புத்தகங்கள் வேண்டும். புத்தகங்களை அச்சடிக்கக் காகிதம் வேண்டும். காகிதம் எங்கிருந்து வருகின்றது?

2. வெகு காலத்திற்குமுன் நம்முடைய நாட்டினர் காகிதத்தில் அச்சடித்த புத்தகங்களை



காகிதம் செய்யும் யந்திரசாலை

வாசிக்கவில்லை. அவர்களுடைய புத்தகங்கள் பனை ஓலையினால் ஆனவை. நம்முடைய நாட்டினர் பனை ஓலையினால் எழுதிக்கொண்டிருந்த

காலங்களில், ஐரோப்பாக் கண்டத்தில் இருந்தவர்கள் தோலை எழுத உபயோகித்தனர். நமது நாட்டினர் எழுதுவதற்குப் பனை ஓலையை உபயோகித்ததற்கும் வெகு காலத்திற்கு முந்தியே, எகிப்து தேசத்தினர் 'பேபிரஸ்' என்னும் மரத்தின் பட்டையினால் காகிதம் செய்ய அறிந்திருந்தனர்.

3. மனிதர்கள் பல பொருள்களில் எழுதி வந்தார்களாயினும், நாளடைவில் காகிதம் செய்யக் கற்றுக்கொண்டனர். அவர்கள் முதலில் பருத்திப் பஞ்சையும், கந்தைத் துணியையும் நன்றாய் ஊறவைத்து அரைத்த மாவினால் காகிதம் செய்தனர். நவீன காலத்தில் வேறு பல பொருள்களை உபயோகித்துக் காகிதம் செய்கிறார்கள். என்றாலும், நயமான காகிதம் செய்வதற்குக் கந்தைத் துணி மிகவும் அவசியமாம். மலிவான காகிதம் செய்வதற்கு மரச்சோற்றி, 'எஸ்பார்ட்டோ' என்னும் புல், சணல் நார், சணல் இலை, கற்றாழை நார் முதலிய பல பொருள்களை உபயோகிக்கலாம்.

4. காகிதம் செய்வதற்காக எந்தப் பொருளைத் தெரிந்துகொண்டாலும், அதை முதலில் 'சோடா' போன்ற உப்போடு சேர்த்து வெந்தெடுக்க வேண்டும். பின்பு, அதை அரைத்து மாவாக்க வேண்டும். மரச்சோற்றியையும், எஸ்பார்ட்டோ புல்லையும் உபயோகிப்பதானால், வேகவைப்பதற்கு முன் அப்பொருள்களை நன்றாய்ச் சதைத்துக் கொள்ளவேண்டும்.

5. சில நாட்டினர் கையினாலேயே காகிதம் செய்கிறார்கள். ஆனால், நயமான காகிதம் செய்

வதற்கு யந்திரங்கள் வேண்டும். நம்முடைய தேசத்தில், கல்கத்தாவில் பெரிய காகித ஆலைகள் இருக்கின்றன. அங்குள்ள யந்திரங்கள், வேகவைத்து அரைத்த மாவை நயமான காகிதமாக மாற்றிவிடுகின்றன. காகிதம் செய்யும் பெரியயந்திரசாலையில், ஒருகோடியில் உள்ள யந்திரத்தில் போடப்படுகிற சரக்குகள் மறு கோடியில் ஒழுங்காய் அறுத்துக்கட்டின காகித மூட்டைகளாயிருப்பதைப் பார்க்கும்போது நாம் மிகவும் அதிசயிப்போம்.

6. இன்று, நாம் காகிதத்தைப் பல காரியங்களுக்கு உபயோகிக்கிறோம்; காகிதத்தில் படம் வரைகிறோம்; காகிதத்தினால் காற்றாடி முதலிய பல விளையாட்டுப் பொருள்கள் செய்கிறோம்; பெட்டிகள் செய்கிறோம். ஜப்பான் தேசத்தார் காகிதத்தினால் தங்களுடைய வீடுகளுக்குக் கதவுகளும் சுவர்களும் அமைக்கிறார்கள். நீங்கள் இன்று முதல் காகிதம் எதற்கெல்லாம் உபயோகப்படுகிறது என்று கவனித்து வாருங்கள். அப்பொழுது அது எம்மட்டும் நமக்கு உதவியாய் இருக்கிறது என்று தெரிய வரும்.

பழமொழி:—"நூல் கற்றவனே மேலானவனாவன்."

அர்த்தம்:—நாளடைவில் = நாட்கள் செல்லச் செல்ல. நவீன காலம் = தற்காலம். நயம் = மேன்மை, சிறப்பு. மரச்சோற்றி = மரத்தின் நடுபாகம். சதைத்து = நசுக்கி. சரக்கு = பொருள். வரை = எழுது. நூல் = புத்தகம்.



19. அடாது செய்தவன் படாது படுவான்

ஒரு ஊரில் நான்கு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் நால்வரும் ஒரு உபாத்தியாயரிடத்தில் சகல சாஸ்திரங்களையும் படித்தார்கள். ஆனால், அவர்களில் நாலாம் சகோதரன் நன்றாய்ப் படிக்கவில்லை. அப்படி யிருக்கையில், ஒருநாள் அவர்கள் நால்வரும் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

முதல் சகோதரன்:—நாம் படிக்க வேண்டிய சகல சாஸ்திரங்களையும் படித்து விட்டோம். இனி நாம் தூரதேசத்தில் இருக்கும் ஒரு அரசனிடம் போகவேண்டும். நாம் நம்முடைய வல்லமைகளை அந்த அரசனுக்குக் காட்ட வேண்டும். அப்போது நமக்கு அரசன் ஏராளமான செல்வம் தருவான்.

இரண்டாம் சகோதரன் :—அப்படியே வருகிற செல்வத்தை நாம் நாலுபேரும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

நான்காவது சகோதரன் :—நாம் நம்முடைய செல்வத்தைக்கொண்டு நம்முடைய ஊருக்கு வந்து வீடு வாசல் நிலங்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு சுகமாய் வாழவேண்டும்.

மூன்ருவது சகோதரன் :—நமது தம்பி படியாதவன். நாம் மூன்றுபேரும் பிரயாசைப்பட்டுப் படித்தோம். நம்முடைய வித்தைகளினுல் வரும் செல்வத்தில் அவனுக்கு ஏன் ஒரு பங்கு கொடுக்க வேண்டும்? நாம் அவனுக்குப் பங்கு கொடுக்கக் கூடாது.

முதல் சகோதரன் :—நம்முடைய தம்பி படியாதவனுய் இருந்தாலும் உலக காரியங்களில் வெகு சமர்த்தனுய் இருக்கிருன். அரசர்கள்

உலக காரியம் தெரிந்தவர்களே மிகவும் மெச்சிக் கொள்வார்கள்.

இரண்டாவது சகோதரன்:—அண்ணு நீர் சொல்கிறது முற்றிலும் உண்மையே. நாம் அவனையும் நம்மோடு கைவிடாமல் அழைத்துக் கொண்டு போவோம். நமக்கு வருகிறதில் அவனுக்கும் ஒரு பங்கு கொடுப்போம்.

மூன்ருவது சகோதரன் .—எனக்கு அது சம் மதமில்லே; பின் உங்கள் இஷ்டம்போல் செய் யுங்கள்.

முடிவில், எல்லோரும் சேர்ந்து ஒரு தூரதேசத்திற்குப் பிரயாணமானுர்கள். போகிற வழியில் ஒரு பெரிய காடு குறுக்கிட்டது. அவர் கள் அந்தக் காட்டைக் கடக்கையில், வழி யிலேயே ஒரு புலி செத்துக்கிடந்ததைப் பார்த் தார்கள். அதைக்கண்ட மூன்ருவது சகோதரன்,

"சகோதரர்களே! நாம் கற்ற, 'இறந்தவர்களைப் பிழைப்பிக்கும் வித்தையை' இந்தப் புலியினிடத்தில் பரீட்சிப்போம்" என்ருன்.

அதைக் கேட்ட நாலாம் சகோதரன், "அண்ணன்மார்களே! நீங்கள் அந்த வித்தையைப்புலியினிடத்தில் பரீட்சைபண்ணலாகாது. அதற்கு உயிர் வந்தால் உடனே அது நம்மை அறைந்து கொன்றுவிடும்; வேண்டாம்" என்ருன். அதைக் கேட்ட மூத்த சகோதரனும், இரண்டாம் சகோதரனும், "தம்பி சொல்வது சரிதான்; நாம் இங்கிருந்து போய் விடுவோம்" என்ருர்கள்.

அதற்கு மூன்ரும் சகோதரன், "நீங்களும் படியாதவனேடு சேர்ந்து மூடர்களாய் விட்டீர்கள். நான் அதை எழுப்பத்தான் போகிறேன்" என்ருன்.

அதற்கு தம்பி, "அடாது செய்பவன் படாது படுவான். நாம் இங்கேயிருந்து ஓடிப் போய் விடுவோம்" என்ருன். அவர்கள், மூன்ரும் சகோதரனை அங்கேயே விட்டுவிட்டு, வெகுதூரம் ஓடிப்போய் உயர்ந்த மரங்களின் மேல் ஏறிக்கொண்டார்கள்.

மூன்ரும் சகோதரன், தன் மந்திர சக்தியினுல் அந்தப் புலியை உயிரோடு எழுப்பினுன். அந்தப் புலி உயிர் பெற்று எழுந்தவுடனே, அவனை ஒரே அறையில் கொன்று அவனுடைய இரத்தத்தைக் குடித்துவிட்டு ஓடிப்போயிற்று. அதன் பின், மற்ற மூன்று சகோதரர்களும் தூர தேசம் போய், திரண்ட செல்வம் சம்பாதித்துக் கொண்டு நாடு திரும்பினுர்கள்.

அர்த்தம் :—நால்வர்=நாலுபேர். வல்லமை=திறமை. ஏராளம்=அதிகம் வித்தை=கல்வி அறிவு. மெச்சு= புகழ். பெற்று=அடைந்து. திரண்ட=பெருத்த, அதிகமான.

---

20. ராட்டினம்

" அம்பலத்தி லாடுகிருர் பாங்கிமாரே " என்ற மெட்டு.

1. ராட்டினத்தின் பெருமையாலே தோழமாரே !—நாம்
நாட்டின் நன்மை நன்கடைவோம் தோழமாரே !

2. உடுக்க ஆடை உகந்தளிக்கும் தோழமாரே !—நமது
உயர்ந்த மானம் காத்திடுமே ராட்டையாலே !

3. பட்டைபோட்ட பஞ்சினுலே தோழமாரே !—மிக
நுட்பமாக நூலிழைப்போம் ராட்டையாலே !

4. பாட்டிமார்கள் காலத்திலே தோழமாரே !—நமது
வீட்டில் நூலைக்குவித்திருந்தார் ராட்டையாலே !

5. பஞ்சை விற்றுப் பாதவிக்கும் தோழமாரே !—நீர்
கெஞ்சவேண்டாம் அந்நியரை ராட்டையாலே !

6. மேழிச் செல்வம் ஓங்கிடுமே தோழமாரே !—பல
ஏழை பாழை பிழைத்திடுவார் ராட்டையாலே !

7. நாட்டுத்துணி மலிந்திடுமே தோழமாரே !—நம்மை
வாட்டி நிற்கும் அடிமையோடும் ராட்டையாலே !

8. வம்பளக்கும் நேரத்திலே தோழமாரே !—நீங்கள்
சம்பளம் பெற்றே மகிழ்ந்திடுவீர் ராட்டையாலே !

9. நூலினாலே கெட்ட செல்வம் தோழமாரே !—ராட்டை
நூலினாலே ஓங்க வேண்டும் என்றுதானே !

10. பாரதத்தாய் மக்களான தோழமாரே !—நாட்டிற்
சேரும் தொண்டு கொண்டாடுவீர் ராட்டையாலே !

அர்த்தம் :—உகந்தளிக்கும்=சந்தோஷித்துக் கொடுக்கும். நூலிழைப்போம்=நூல் நூற்போம். மேழிச் செல்வம்=பயிர்த் தொழிலால் வரும் செல்வம். மலிந்திடும்=நயமாகும். நூலினால் கெட்ட செல்வம்=படிப்பு மிகுதியால் எந்தத் தொழிலும் தேர்ச்சியடையாமல் குறைந்த செல்வம்.

---

21. கடல் ரோஜா

1. முன்னொரு காலத்தில் பாரசீகநாட்டில் புகழ்பெற்ற மன்னன் ஒருவன் இருந்தான். அவன் சகல பாக்கியங்களும் உடையவனாயிருந்தான்; ஆயினும் அவனுக்கு ஒரு பெருங் குறைவிருந்தது. அவனுக்கு மனைவியாக இருப்பதற்கு ஏற்ற நற்குணங்களும், நல்ல அழகும் உடைய ஒரு பெண் எங்குமே அகப்படவில்லை. அவன் தன் குறைவை நினைத்து மிகவும் மனம் வருந்திக் கொண்டிருந்தான்.

2. இப்படியிருக்கையில் ஒரு நாள், ஒரு அடிமை வர்த்தகன் மிகவும் அழகிய ஒரு கன்னி

கையைக் கொண்டு வந்து அரசனுக்கு விற்றுச் சென்றான். அரசன் அந்த அழகிய அடிமைப் பெண்ணை மணந்துகொண்டான். அவளை நல்ல ஆடை ஆபரணங்களினால் அலங்கரித்தான். அவள் சந்தோஷமாய் வாழ மிகவும் அழகான மாளிகைகள் கட்டிக் கொடுத்தான். அவன் அவளை அன்பாக நேசித்துச் சுகமாக வாழ்ந்து வந்தான்.

3. என்றாலும், அந்த அடிமைப் பெண் ஒரு நாளாயினும் அரசனிடம் வாய் திறந்து பேசவில்லை. அவள் ஒரு ஊமைபோலிருந்து வந்தாள். தினந்தோறும் அவள் மாளிகையில், கடற்கரைக்கு அருகாமையில் உட்கார்ந்து கொண்டு பாரசீகக் கடலையே பார்த்துக் கொண்டிருப்பாள். இவ்வாறு ஒரு வருஷம் சென்றதும், அவள் மிகவும் அழகிய ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். தனக்கு மகன் பிறந்த செய்தியைக் கேட்ட அரசன் சொல்ல முடியாத சந்தோஷம் அடைந்தான். அவன் தன் மனைவியின் அருகில் உட்கார்ந்து கொண்டு, "என் அன்பே! உன்னால் எனக்கு எல்லா பாக்கியங்களும் கிடைத்தன. ஆனால், என்னிடமட்டும் நீ உன் வாயைத் திறந்து பேசாமல் இருக்கிறாயே. உன் வாயைத் திறந்து என்னிடம் ஒரு வார்த்தை பேச மாட்டாயா?" என்று கெஞ்சிக் கேட்டான்.

4. அதைக் கேட்ட அடிமைப் பெண் புன்னகை செய்து, "என் அன்பார்ந்த மன்னரே! நான் ஒரு அடிமைப் பெண்; என்றாலும், நீர் என்னை வெகு அன்பாக நடத்தி வந்தீர்.

அதற்காக நான் உமக்கு நன்றி பாராட்டு கிறேன். ஆனால், ஒரு ராஜ குமாரியை ஒரு வியா பாரி பிடித்து அடிமையாக விற்றுவிட்டால், அந்தப் பெண்ணுக்கு யாரிடத்திலாவது பேச மனம் வருமா ?" என்றாள்.

5. பாரசீக மன்னன் மிகவும் ஆச்சரிய மடைந்து, "என்ன ? நீ ஒரு ராஜ குமாரியா ?" என்று கேட்டான்

6. அதற்கு அவள், "ஆம், நான் ஒரு ராஜ குமாரியே ; என் பெயர் கடல் ரோஜா. என் சகோதரன் கடலின் ஆழத்தில் உள்ள மிகவும் செல்வமான ஒரு ராஜ்யத்தை ஆளும் அரசன். அவன் பெயர் சாலா. சென்ற வருஷம் என் சகோதரனுடைய நாட்டைப் பகைவர்கள் எதிர்த்தார்கள். அப்பொழுது என் சகோதரன் எனக்காக மிகவும் கவலைப்பட்டான் ; என்னை பூமியில் ஒரு ராஜனுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாகச் சொன்னான். அது எனக்கு இஷ்டம் இல்லை: அதனாலே, நான் என் சகோதரனுக்குத் தெரியாமல் கடலை விட்டு வெளியேறி உமது நாட்டுக்கடற்கரையில் வந்து நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது அந்த வியாபாரி என்னை அடிமையாகப் பிடித்து உமக்கு விற்றுவிட்டான்" என்றாள்.

7. அதைக் கேட்ட அரசன், "என் அன்பே, நான் உன்னை ஒருபோதும் ஒரு அடிமைப் பெண்ணாக நினைக்கவில்லையே" என்றான்.

8. அதற்குக் கடல் ரோஜா, "நீர் என்னை வெகு அன்பாக நேசித்துக் கலியாணம் பண்

ணிக் கொண்ட தினுலேதான் நான் இதுமட்டும்

உம்மோடு இருக்கிறேன். இல்லாவிட்டால், அப்பொழுதே கடலில் குதித்து என் சகோதர

னிடம் போயிருப்பேன். என் சகோதரன் என் குழந்தையைப் பார்க்க மிகவும் ஆசைப்படுவான். நான் அவனுக்கு என் குழந்தையைக் காட்ட வேண்டும்'' என்ருள்.

9. உடனே ரோஜா ஒரு வேலைக்காரியிடம் நெருப்புக் கொண்டுவரச் சொன்னுள். அந்த நெருப்பில் சாம்பிராணி தூபம் இட்டாள்; புகை அரண்மனை ஜன்னல் வழியாகக் கடலின் மேல் வீசியது. அப்பொழுது அவள் 'முணு முணு' என்று ஏதோ மந்திரம் ஜபித்தாள். அவள் மந்திரம் ஜபித்த வுடனே, கடல் பேரிரைச்சலோடு கொந்தளிக்க வாரம்பித்தது. அலைகள் அங்கு மிங்கும் சிதறி அகன்றன. அப்பொழுது கடலின் ஆழத்திலிருந்து மிகவும் அழகிய ஒரு அரசனும், அவனுடைய மனைவிமார்களும், பல வீரர்களும் வெளிப்பட்டு, பாரசீக மன்னனுடைய அரண்மனைக்குள் நுழைந்து, கடல் ரோஜா முன் வந்து கூடினர். கடல் மன்னன், தன் சகோதரியைப் பார்த்தவுடனே "என் அன்பார்ந்த ரோஜா! நான் பகைவர்களை வென்று விட்டேன்; நீ இப்பொழுது என்னேடு வரலாம். நான் கடலின் ஆழத்தில் உனக்கு ஏற்ற ஒரு கணவனைப் பார்த்திருக்கிறேன்'' என்ருன்.

10. அதற்கு ரோஜா, "சாலா, எனக்கு மணம் முடிந்து விட்டது. இதோ! இங்கே நிற்கிறவர்தாம் என் கணவர்; இவர் பாரசீக நாட்டு மன்னர். இதோ! என் குழந்தையைப் பார்'' என்று காட்டினுள்.

11. சாலா மிகவும் ஆவலோடு குழந்தையை வாங்கிக்கொண்டு ஜன்னல் வழியாக வெளியே கடலினுள் குதித்து மறைந்து போய் விட்டான். அதைக் கண்ட பாரசீக மன்னன் நடு நடுங்கிவிட்டான். அப்பொழுது ரோஜா மன்னனைப் பார்த்து, "என் அரசே! கவலைப்பட வேண்டாம். என் சகோதரன் எனக்கு இஷ்டமான காரியத்தையே செய்திருக்கிறான். கடலினுள் வாழ்கிற எங்களைப் போலவே நம்முடைய குழந்தையும் கடலின் ஆழத்தில் வாழ முடியுமோ என்று அறியவே, சாலா குழந்தையைக் கொண்டு போயிருக்கிறான்" என்றாள்.

12. அவள் கூறியது உண்மையே. சாலா சற்று நேரத்திற்கெல்லாம் குழந்தையோடு கடலிலிருந்து வெளியே வந்தான். அவனுடைய கரங்களில் குழந்தை சந்தோஷமாகச் சிரித்துக் கையையும் காலையும் ஆட்டிக்கொண்டிருந்தது. அது கடலின் கீழ் உள்ள காற்றை உட்கொண்டதினால் மிகவும் களிப்படைந்திருந்தது. அதன் உடைகள் கொஞ்சங்கூட நனையவே யில்லை. சாலா குழந்தையை ரோஜாவிடம் கொடுத்து விட்டு விடை பெற்றுக்கொண்டு, தன் மனைவிமாரோடும், வீரர்களோடும் கடலின் ஆழத்தில் உள்ள தன் ராஜ்யத்திற்குப் போய்விட்டான்.

13. பாரசீக மன்னன் தான் கண்ட காட்சிகளை நினைத்து மிகவும் ஆச்சரிய மடைந்தான். தானும் தன் குழந்தையைப் போலவே கடலினுட் சென்று, அங்குள்ள பல அழகிய காட்சிகளையும், அழகிய பொருள்களையும் பார்க்க முடியவில்லையே என்று மிகவும் துக்கித்தான்.

ஆனால், அவனுடைய மனைவியும், மகனும் கடலின் கீழுள்ள ராஜ்யத்திற்குப்போய்த் திரும்பி வந்த போதெல்லாம், அவர்கள் அங்குக் கண்ட காட்சிகளை மன்னனுக்குக் கதையாகச் சொல்லி வந்தார்கள். மன்னன் அடிக்கடி அக்கதைகளைக் கேட்டு மிகவும் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தான்.

அர்த்தம் :—புகழ்பெற்ற=கீர்த்தி அடைந்த. வர்த்தகன்=வியாபாரி. கன்னிகை=கலியாணமாகாத பெண். மணந்து=கலியாணம் பண்ணிக்கொண்டு. ஆடை=உடை. ஆபரணம்=நகைகள். அலங்கரி=அழகு செய். தூபம்=வாசனைப் புகை. வென்று=ஜயித்து. களிப்பு=சந்தோஷம்.

---

22. நீராவியின் வருகை

1. இந்தப் பூமியில் தண்ணீர் எப்பொழுது தோன்றிற்று என்று யாராவது சொல்ல முடியுமா? அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியுமானால், நீராவி எப்பொழுது வந்தது என்ற கேள்விக்கும் பதில் சொல்லலாம். ஏனென்றால், நீராவி நீரிலிருந்து வருகிறது என்று நம்மெல்லோருக்கும் தெரியும்.

2. நீங்கள் ஒரு சிறு கிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி நல்ல வெயிலில் வையுங்கள். அது அங்கேயே வெகு நேரம் இருக்கட்டும்; பின்பு வந்து பாருங்கள். அக்கிண்ணியிலிருந்த நீர் எங்கே போய்விட்டது? அது சூரியனுடைய வெப்பத்தினால் நீராவியாக மாறி மறைந்துபோய்விட்டது. இப்படியே, உலகத்திலிருந்து போகிற நீராவி, வானத்தில் மேகங்

களாகிப் பின் மழையாகப் பெய்கின்றது. நீங்கள், மேகங்கள் ஒன்றோடொன்று மோதுகிற பொழுது உண்டாகிற ஓசையைக் கேட்டுப் பயப்படுகிறீர்கள் அல்லவா? அந்த இடியோசை நீராவிக் கூட்டங்கள் ஒன்றோடொன்று மோதுவதினுல் உண்டாவதேயாம். நீராவியின் வலிமையைப் பார்த்தீர்களா?

3. நீங்கள் ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி அடுப்பின்மேல் வையுங்கள். அப்பொழுது நீர் தீயின் உஷ்ணத்தினுல் கொதிக்கின்றது; தண்ணீர் ஆவியாக மேலே எழுகின்றது. தண்ணீர் கொதிக்கும்பொழுது பாத்திரத்தின் வாயை ஒரு தட்டினுல் மூடுங்கள். பாத்திரத்தினுள் ஆவி அதிகமாய் நிறைகின்றது. ஆனுல், அதற்கு அங்கே அதிக இடமில்லை. உடனே அது வெளிப்படுவதற்காக வெகு வேகமாய்ப் பாத்திரத்தின் மூடியைத் தள்ளுகிறது. அப்பொழுது மூடி மேலும் கீழுமாகக் குதிக்க வாரம்பிக்கின்றது. நீராவியின் வலிமையைப் பார்த்தீர்களா? ஒரு சிறு பாத்திரத்தில் உள்ள தண்ணீருக்கு அவ்வளவு சக்தியிருந்தால் ஒரு பெரிய பானையில் கொதிக்கிற ஜலத்திலிருந்து எழும்புகின்ற அதிகமான ஆவிக்கு எவ்வளவு சக்தியிருக்கும்? இந்த நீராவியின் சக்தி வெகு காலமட்டும் மனிதருக்கு அதிகமாகப் பயன்படாமல் மறைந்திருந்தது. நாளடைவில் மனிதர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அதன் உபயோகத்தை அறிந்து கொண்டனர்.

4. மனிதர்கள் வெகு காலத்திற்கு முன்னமேயே நீராவியின் உபயோகத்தை அறிந்திருந்தனர். நமது நாட்டில் பழைய காலத்துப் பாட்டிமார் நீராவியை உபயோகித்துப் பிட்டும், இட்டலியும்பண்ண அறிந்திருந்தனர். ஆனால், நீராவியினால் யந்திரங்களை ஓட்டத் தெரிந்து கொள்வதற்கு மனிதர்கள் வெகுகாலமட்டும் காத்திருக்க வேண்டியதாயிருந்தது.

5. ஏறக்குறைய 280 வருஷங்களுக்குமுன் டார்த்மவுத் என் ஊரில் நியுகோமன் என்ற ஒருவன் பிறந்தான். அவன் கருமான் வேலை செய்ய ஆரம்பித்தான். அந்த மனிதன்தான் முதலில் நீராவியை யந்திரம் ஓட்டுவதற்கு உபயோகித்தான். அவன் ஒரு நீர் இறைக்கும் குழாய் யந்திரம் செய்து அதை நீராவியினால் ஓட்டினான். அவன் செய்த யந்திரம் வெகு நாட்கள் மட்டும் எவ்விதச் சீர்திருத்தமும் அடையாமல் இருந்தது.

6. நீராவியின் உபயோகத்தை உலகில் நிலைநாட்டிப் பயன்படுத்த, சுமார் 200 வருஷங்களுக்கு முன் ஒரு சிறுவன் பிறந்தான். அவன் பெயர் ஜேம்ஸ் வாட்.

7. ஜேம்ஸ் வாட் சிறு பையனாய் இருந்த போது, ஒரு நாள் தன் பெற்றோர்களுடன் காலையில் சாப்பிட உட்கார்ந்தான். மேல்நாட்டு ஜனங்கள் நாற்காலிகளில்உட்கார்ந்துமேசையின்மேல் சாப்பிடுவார்கள். அப்படியே ஜேம்ஸ் வாட்டும், அவனுடைய பெற்றோர்களும் சாப்பிட உட்கார்ந்திருந்தார்கள். மேசையின் நடுவில் ஒரு மூக்குக் கெண்டியில் ஜலத்தை ஊற்றிக் கரியடுப்

பின்மேல் வைத்திருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் மூக்குக் கெண்டியிலிருந்த ஜலமெல்லாம் கொதிக்க வாரம்பித்தது. அதைக் கண்ட சிறுவன் உடனே ஒரு கரண்டியை எடுத்து அந்த நீராவியோடுவிளையாடத்தொடங்கினன். இப்படி விளையாடிக் கொண்டிருந்த சிறுவனுக்கு நீராவியைப் பற்றிய பல சிந்தனைகள் உதித்தன. அவன் பெரியவனானபோது, நியுகோமன் செய்த நீர் இறைக்கும் யந்திரத்தைத் தகுந்தபடி சீர்திருத்தினன்.

8. அவன் நீராவியை ஒரு நாழியில் அடைக்கவும், நாழியினுள் நெருங்கி அடைபட்ட நீராவி வெகுவேகமாக ஒரு உலக்கையைத் தள்ளிக்கொண்டு வெளிப்படவும் வழி முறைகள்

அமைத்தான். நீராவி வெளிப் பட்டவுடனே

உலக்கை தாழும்; மறுபடியும் நீராவி நிறைந்தவுடனே அது உலக்கையை வெளியே தள்ளும். இந்த உலக்கையிலிருந்து புறப்பட்ட ஒரு கை ஒரு சக்கரத்தைச் சுழற்றும். அந்தச் சக்கரம் மற்ற பாகங்களைச் சுழலச் செய்யும். அப்பொழுது, முழு யந்திரமும் வேலை செய்யவே, தண்ணீரானது இறைக்கப்பட்டு வெளியே பாயும்.

9. முதன் முதலில் நீராவியை ஏற்ற முறைப்படி யந்திரங்களை ஓட்ட உபயோகித்தவன் ஜேம்ஸ் வாட் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள்.

அர்த்தம்:—சீர்திருத்தம்=புதிய வழியில் திருத்துதல். சிந்தனைகள்=எண்ணங்கள். பயன்படுத்த=பிரயோசனமாக்க.

---

23. மேகம்

1. மிகவும் உஷ்ணமான வேனிற் காலத்தில் ஒரு நாள் காலையில் சின்னஞ் சிறு மேகம் ஒன்று இந்திய மகா சமுத்திரத்திலிருந்து புறப்பட்டது. அது நெடுந்தூரம் பிரயாணம் பண்ணி முடிவில் தென்குமரி முனையை அடைந்தது.

2. ஆகாசம் மிகவும் அழகான நீலப்பட்டு விதானம் விரித்தாற் போலிருந்தது. அந்த நீல வானத்தின் வழியாக மெதுவாய் அசைந்தாடித் திரிவது அந்தக் குட்டி மேகத்திற்குப் பரமானந்தமாயிருந்தது. காற்றும் மெதுவாய் வீசிக்கொண்டிருந்தது. அந்தக் குட்டி மேகம் தென்னிந்தியாவின் நிலப்பரப்பின் மேல் வெகு

தூரம் பிரயாணம் பண்ணிக்கொண்டு வரும் போது வழியில் ஒரு பெரிய வெள்ளை மேகத்தைப் பார்த்து, "அக்காள்! நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டது.

3. அதற்கு அப்பெரிய மேகம் "நான் இந்திய மகா சமுத்திரத்திலிருந்து மொண்டு கொண்டு வந்த தண்ணீரை வடக்கு மலைகளுக்குக் கொண்டு போகிறேன்" என்றது.

4. குட்டி மேகம், "அக்காள், அந்த மலைகளிலே மழை ஏராளமாயிருக்குமே. அப்படியிருக்க, நீ உன் அருமையான தண்ணீரை இத்தனை பாடுபட்டு அவ்வளவு தூரம் என் சுமந்துகொண்டு போகிறாய்? இதோ! இந்தப் பூமியைப் பார். இங்கே காணப்படுகிற பிரதேசமெல்லாம் சூரியனுடைய உஷ்ணத்தினால் கருகி வதங்கிப் போயிருக்கிறதே. புல் பூண்டுகள் யாவும் நமக்காக மிகவும் ஏங்கி நிற்கின்றனவே. உன்னுடைய அளவிறந்த பொக்கிஷத்தை, வருந்தி வேண்டுகிற தரித்திரருக்குக் கொடாமல், மிதம் மிஞ்சின செல்வமுடைய மலைகளின்மேல் பொழியப் போகிறாயா?" என்றது.

5. "தங்காய், இக் கொடிய உஷ்ணப் பிரதேசத்தில் யார்தான் மழை பொழிவார்கள்? 'பாத்திர மறிந்து பிச்சை கொடுக்கவேண்டும்' என்று சொல்லியிருக்கிறதே! இந்தக் காய்ந்து வறண்ட நிலத்திற்குக் கொடுப்பதினால் என்ன பிரயோஜனம்? மேலும், நான் அழகிய மலை உச்சிகளில் தங்கி விளையாட விரும்புகிறேன். இங்கே, இனி சிறிது நேரங் கூடத் தங்கமாட்டேன்," என்று சொல்லிவிட்டு, அந்தப் பெரிய மேகம் அவ்

விடத்திலிருந்து விரைவாய் வட கிழக்கு நோக்கிச் சென்றது.

6. பின்பு, அச்சிறு மேகம் சிறிது தூரம் ஆடி அசைந்து ஆகாயத்தில் மிதந்து சென்றது. ஓரிடத்தில் சிறிது இளைப்பாறுவது போல, மேலே தொங்கிக் கொண்டு அங்கிருந்த படியே கீழே பூமியைப் பார்த்தது. பூமியில் ஜனங்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழும்படி பாடு படுவதையும், ஆடு மாடுகள் கதறிக்கொண்டு தழைகளையும் புல்லையும் தேடி அலைவதையும் கண்டது. அப்பொழுது, அக் குட்டி மேகம் மிக்க மனவுருக்கத்தோடு, "ஐயோ! இந்த ஏழை உயிர்களுக்கு நான் சிறிது உதவி புரிந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்?" என்று நினைத்தது. அந்தச் சிறு மேகத்தின் உள்ளத்தில் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்ற ஆசை பலமாய்க் குடிகொண்டது. அந்த ஆசை வளர வளர, அம் மேகம் தன் உருவத்திலும் பெரிதாகிக் கொண்டே வந்தது.

7. பூமியில் மனிதர்கள் சூரியனுடைய வெப்பத்தைத் தாங்க முடியாமல் சோர்ந்து விழுந்தார்கள். ஏழை மனிதர்கள் ஒரு கைக் கூழுக்காக மெய் வருந்தப் பாடுபட்டார்கள். வெயிலில் கஷ்டத்தோடு வேலை செய்து கொண்டிருந்த ஜனங்கள் அடிக்கடி தலையை மேலே ஏறெடுத்துப் பார்த்து, "ஆ! அந்த மேகம் தன் நீரை இங்கே பெய்யாதா?" என்று ஆவலாய்ப் பார்த்தார்கள்.

8. அதைக் கண்ட அச்சிறு மேகம், "ஏழைகளே! கவலைப்படவேண்டாம். இதோ!

உங்களுக்கு உதவி செய்ய நான் வருகிறேன்'' என்றது. உடனே பூமியை நோக்கி விரைவாய் இறங்க ஆரம்பித்தது. ஆனால், திடீரென்று அதற்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. அது தன் தாயாகிய இந்திய மகாசமுத்திரத்தின் மடியில் சிறு குழந்தையாய் இருந்தபோது, அதன் தாய் அதற்கு ஒரு கதை சொல்லி யிருந்தாள். ஒரு மேகம் பூமியின் சமீபமாகச் சென்றபோது திடீரென்று செத்துப் போய் விட்டதாம். அந்தக் கதை குட்டி மேகத்தின் நினைவிற்கு வந்தது. அப்பொழுது அது, "நானும் அந்த மேகத்தைப்போல இறந்து போவேனோ?'' என்று பயப்பட்டது; மேலும், கீழ் இறங்க மனம் இல்லாமல் நின்று விட்டது. அதன் மனத்தில் பல விதமான எண்ணங்கள் தோன்றின. ஆகையால், அது நடுவானத்தில் அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருந்தது. வெகு நேரம் யோசனை செய்த பின், அது வெகு தைரியத்தோடு, "பூமியின் குடிகளே! வருந்த வேண்டாம்! இதோ, நான் வருகிறேன்! உதவி புரிய வருகிறேன்!'' என்று, மிக்க மன உறுதியோடு சொல்லிற்று.

9. உடனே, அந்த மேகம் மிகப் பெரிதாகவும் மகா வல்லமை உடையதாகவும் மாறி விட்டது. அது தன் இறக்கைகளை நாலு திசைகளிலும் விரித்து, வயல் வெளிகளையும் சோலைகளையும் மறைத்தது. அதனுடைய பெரிய வடிவத்தைக்கண்டமனிதர்கள்பேராச்சரியமடைந்து நின்றனர். மரங்களும், செடிகளும், கொடிகளும், புல்லும் அதை ஒரு தெய்வமென்றே நினைத்து வணங்கின. பூமியில் உள்ள உயிர்கள்

யாவும் "அதோ! அந்த மேகம் நமக்குத் திட்டமாய் நன்மை செய்யும்" என்றார்கள்.

10. அப்பொழுது அந்த மேகம், இடி முழக்கமான குரலிலே "ஆம், உலகத்திலுள்ள உயிர்களே! இதோ! உங்களைக் காக்க வருகிறேன். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றது. உடனே, அதன் இருதயம் வெடித்தது. அங்கும் இங்கும் "பளீர்! பளீர்!" என்று மின்னல்கள் வீசின. சொல்லமுடியாத அன்பு அதன் இருதயத்தை அசைத்து ஆட்டியது. அது பூமியை நெருங்கி, தன் உடலையும் உயிரையும் தாகத்தினால் வருந்தின பிராணிகளுக்காகக் குளிர்ந்த மழையாய்ப் பெய்தது; அதோடு தன் உயிரையும் விட்டது.

11. அந்த மேகத்தின் அன்பான மழையினால் உலகில் உள்ள ஜனங்கள் அதை வாழ்த்தினார்கள். அது இறந்தவுடனே வானத்தில் மிகவும் அழகிய ஒரு வானவில் தோன்றியது. அந்த வானவில் குட்டி மேகம் உலகத்திற்குச் செய்த உபகாரத்தையும் அதன் பேரன்பையும் பாட்டாகப் பாடினது. பின்பு சற்று நேரத்திற்குள் மறைந்து போயிற்று.

பழமொழிகள் :—(1) வானம் செய்த உதவிக்கு வையகம் என்ன செய்யும்? (2) மழை பெய்தால் மண் சிறக்கும்.

அர்த்தம் :—விதானம்=மேல்கட்டி. ஏராளம்=அதிகம். பொக்கிஷம்=திரவியம். வறண்ட=உலர்ந்த. விரைவாய்=வேகமாக. நினைவு=ஞாபகம். பேரன்பு=பெரிய அன்பு.

24. திருவள்ளுவர்

1. முன்னொருகாலத்தில்பகவன் என்னும் அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் சகல நூல்களையும் நன்றாய்க்கற்றவர். அவர்கடவுளிடத்தில்

மாருத அன்புடையவர். அவருடைய மனைவியின் பெயர் ஆதி. அவர் தமது மனைவியோடு புண்ணிய ஸ்தலங்கள் தோறும் செல்வார்;

கடவுளுடைய புண்ணிய தீர்த்தங்களிலே நீராடுவார்; கடவுளுடைய கோவில்களில் சுவாமி தரிசனம் செய்வார். இவ்வாறு, அவர் தீர்த்தாடனம் செய்துகொண்டே மைலாப்பூருக்குப் போய்ச் சேர்ந்தார்.

2. பகவன் மைலாப்பூருக்குப் பக்கத்தில் இருந்த ஒரு இலுப்பைத் தோப்பில் தமது மனைவியோடு தங்கி யிருந்தார். அப்பொழுது அவருடைய மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். அதைக் கண்ட பகவன், “பெண்ணே! இது கடவுள் தந்த குழந்தை. இது கடவுளுக்கேசொந்தம். இதைஇலுப்பைத் தோப்பிலுள்ள சிவலிங்கத்தின் முன் கிடத்தி விட்டு நாம் இங்கிருந்து போய்விடுவோம்” என்றார்.

3. ஆதி, தன் நாயகர் கூறியபடி செய்யத் தீர்மானித்தாள்; ஆயினும், குழந்தையை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் சிறிது தயங்கினாள். அப்பொழுது அந்தக் குழந்தை தாயைப் பார்த்து, “அம்மா! நீ கவலைப்படாதே! எல்லா உயிரையும் காக்கக் கடவுள் ஒருவர் இருக்கிறார்” என்று சொல்வதுபோல உதடுகளை அசைத்துச் சிரித்ததாம். அதைக் கண்ட தாயார், கவலைப் படாமல் குழந்தையைச் சிவலிங்கத்தின் முன் படுக்கவைத்து விட்டுத் தன் கணவரோடு அந்த ஊரை விட்டுப் போய்விட்டாள்.

4. அந்த இலுப்பைத் தோப்பிற்கு அருகாமையில் ஒரு வேளாளன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மனைவி தினந்தோறும் அந்தத் தோப்பிலிருந்த சிவலிங்கத்தைப் பூஜித்து,

"சுவாமி ! எனக்குக் குழந்தை இல்லாததினலே நான் மிகவும் துக்கப்படுகிறேன். என் குறையைத் தீர்த்து, எனக்கு ஒரு குழந்தையைத் தாரும்" என்று மன்றுடுவாள்.

5. ஆதியும், பகவனும் இலுப்பைத் தோப்பை விட்டகன்ற தினத்தில், அவள் வழக்கம்போலச் சிவலிங்கத்திற்குப் பூஜையிட வந்தாள். அங்கு, சிவலிங்கத்திற்கு அருகாமையில் கிடந்த மிகவும் அழகான ஆண் குழந்தையைக் கண்டாள். குழந்தையை இரண்டு கைகளினலும் வாரி எடுத்தாள்; மார்போடு அணைத்து முத்தம் இட்டாள்; கடவுளைப் புகழ்ந்தாள்; அதைத் தன் வீட்டிற்குக் கொண்டு போய்த் தன் கணவனுக்குக் காட்டினுள். அவனும் அதைக்கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தான். அவர்கள் அக்குழந்தையை அன்போடு வளர்த்து வரலாயினர்.

6. இவ்வாறு, அவர்கள் அக் குழந்தையை வளர்த்து வருவதைக் கண்ட அவர்களுடைய உறவினர்கள் அவர்களைக் குறை கூறத் தொடங்கினுர்கள். அதைக் கேட்ட வேளாளனும் அவன் மனைவியும் மிகவும் மனம் வருந்தினுர்கள். அவர்கள் தங்கள் உறவினர்களுடைய வாயை மூடுவதற்கு என்ன உபாயம் என்று சிந்தித்தார்கள். முடிவில், தங்கள் வீட்டுப் புறக்கடையில் இருந்த மாட்டுக்கொட்டிலில் ஒரு தொட்டில் கட்டி, குழந்தையை அதில் விட்டு, பண்ணை ஆட்களைக் காவல் வைத்து வளர்த்து வந்தார்கள். வள்ளுவ ஜாதியைச் சேர்ந்த பண்ணையாட்கள் குழந்தையைக் காத்து

வந்தமையாலே, எல்லோரும் அதை வள்ளுவன் என்று அழைத்தார்கள்.

7. வேளாளனுடைய அன்பான வளர்ப்பினுல் வள்ளுவர் வளர்ந்து பெரியவர் ஆனுர். அவர் சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தார். அவர் சகல நற்குணங்களும் பொருந்திய வாசுகி என்னும் பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொண்டார். பின்பு மைலாப்பூரில் நூல் நூற்றுத் துணி நெய்து பொருள் சம்பாதித்துத் தம்முடைய குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

8. திருவள்ளுவர் மிகவும் சிறந்த அறிவைத் தரும் புத்தகம் ஒன்று எழுதினுர். அதன் பெயர் குறள். அவர் எழுதின புத்தகம் இந்த உலகத்திலுள்ள மற்றெல்லாப் புத்தகங்களைப் பார்க்கிலும் சிறந்தது. நீங்கள் பெரியவர்களாகும் பொழுது அந்தப் புத்தகத்தைப் படிக்க மறவாதீர்கள்.

பழமொழி :—“நல்லோர் பிறக்கும் இடம் யார் அறிவார்.”

அர்த்தம் :— அந்தணர்=பிராமணர். சகல=எல்லா. நூல்கள்=புத்தகங்கள். மாருத=நீங்காத. தீர்த்தாடனம்=புண்ணிய தீர்த்தங்களில் மூழ்குதல். நாயகர் =புருஷர். தயங்கினுள்=கலங்கினுள். மன்ருடு =கெஞ்சிக்கேள். அகன்ற=நீங்கின. உபாயம்=வழி. சிந்தி=நினை.

திருக்குறள்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் மாற்றல் அரிது.

தீயினுற் சுட்டபுண் உள் ஆறும் ஆருதே
நாவினுல் சுட்ட வடு.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார்.

25. தீபாவளிப் பண்டிகை

1. நமது தேசத்தில் உள்ள சிறியோரும் பெரியோரும் விரும்பிக் கொண்டாடுகிற பண்டிகை தீபாவளியேயாம். தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு மாதத்திற்கு முன்னமேயே துணிக்கடைகளில் பலவகையான துணிகள் வந்து நிறைந்துவிடும். பண்டிகைக்கு ஒரு வாரம் இருக்கும்போதே கடைகளில் பட்டாசு வகைகள் பல கட்டுக் கட்டாக நிறைந்துவிடும். தீபாவளிப் பண்டிகை என்றைக்கு என்று பிள்ளைகள் வெகு ஆவலோடு தங்கள் பெற்றோரைக் கேட்டறிய முயலுவார்கள்.

2. தீபாவளி வந்துவிட்டதென்றால், புதிய வேஷ்டி, புதிய சொக்காய், புதிய பட்டு, புதிய பாவாடை, புதிய உடைகள் எல்லாம் கடைகளிலிருந்து வீட்டிற்கு வந்துவிடும். தாய்மாரும் பாட்டிமார்களும், வீட்டிலுள்ள பெண்களும் மறுநாள் காலையில் சாப்பிடுவதற்கு வேண்டிய பலகாரவகைகளை வெகு உற்சாகத்தோடு ஆயத்தம் செய்வார்கள். சிறுவர்கள் பலமுறை சமயல் அறைக்குச் சென்று, "அம்மா, நாளைக்கு நமது வீட்டில் என்ன பலகாரம்?" என்பார்கள். மாலையில் தகப்பனார், வீட்டிற்கு வந்தவுடனே, "அப்பா! அப்பா! பட்டாசு வாங்கிவிட்டீர்களா?" என்று அவர்கள் வெகு ஆவலாய்க் கேட்பார்கள்.

3. தீபாவளி நாளில் வீட்டில் உள்ள யாவரும் அதிகாலையில்எழுந்துஎண்ணெய்தேய்த்து வெந்நீரில் மூழ்குவார்கள். பின்பு புதிய

ஆடை அணிந்து, பலகாரங்களைக் களிப்போடு சாப்பிடுவார்கள். சிறுவர்கள் வெகு பரபரப் போடு சாப்பிட்டுவிட்டுத் தங்கள் பட்டாசுக் கட்டுகளை எடுத்து 'டப்! டுப்! டப்!' என்று வெடிக்கச் செய்வார்கள். தீபாவளி அன்று நமது தேசம் எங்கும் ஒரே சந்தோஷமாய் இருக்கும். தீபாவளிப்பண்டிகை நமது தேசீயப் பண்டிகை.

4. நாம் எதற்காக இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம் என்று தெரியுமா? உங்களுக்கு அது தெரியாவிட்டால், நீங்கள் பண்டிகை கொண்டாடுவதில் ஒரு பிரயோசனமும் இல்லை. ஆகையால், நான் அதைச் சுருக்கமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

5. முன்னொரு காலத்தில் நரகன் என்று ஒரு அசுரன் இருந்தான். அவன் இந்த உலகத்தில் உள்ள கெட்ட குணங்களுக்கும் கெட்ட காரியங்களுக்கும் ராஜா. அவனுக்கு நல்ல குணம் என்றால் என்னவென்றே தெரியாது. நல்ல காரியம் எதுவென்றே அவன் அறியான். மிகவும் கொடியவனாகிய நரகன் வெகு தூரத்திற் கப்பால் ஒரு தீவில் ஒரு பெரிய கோட்டை கட்டிக்கொண்டு அதில் வாழ்ந்து வந்தான்.

6. நரகன் இந்த உலகத்திலுள்ள நல்லவர்களைப் பலவாறு துன்பப்படுத்தி வந்தான். தேவர்களுக்குச் சொல்ல முடியாத துன்பம் செய்து வந்தான்; சிறு குழந்தைகளைக் கொன்று விடுவான். அவன் செய்த தீமைகளை யெல்லாம் அளவிடவே முடியாது. உலகத்தில் உள்ள ஜனங்கள் எல்லோரும் அவன் செய்த

அக்கிரமத்தைப் பொறுக்க முடியாமல் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலே போய் முறையிட்டார்கள்.

7. அதைக் கேட்டவுடனே ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கடுங்கோபம் வந்து விட்டது. அவர் ஜனங்களைப் பார்த்து, "நீங்கள் கவலைப்பட வேண்டாம்; நான் போய் அந்த அசுரனைக்



கொன்று வருகிறேன்'' என்றார். உடனே தமது மனைவியாகிய சத்தியபாமாவைத் தம்மோடு அழைத்துக்கொண்டு கருடவாகனத்தின் மேல் ஏறினார். கருடன் கிருஷ்ணனையும் சத்திய பாமாவையும் தூக்கிக்கொண்டு, ஆகாய மார்க்கமாய்ப் பறந்து நரகாசுரன் இருந்த தீவிற்குச் சென்றான்.

8. அங்கே நரகாசுரன் மகா பலசாலிகளான பல இராக்ஷசர்களையும் அசுரர்களையும் தன் கோட்டைக்குக் காவலாக வைத்திருந்தான். அவர்கள் கிருஷ்ணன் வருகிறதைக் கண்டு அவரோடு சண்டை செய்யப் போனார்கள். கிருஷ்ணன் அந்த அசுரர்களை யெல்லாம் மிகவும் வலிமையுடைய பாணங்களை எய்து கொன்று விட்டார்.

9. முடிவில் நரகாசுரன் கிருஷ்ணனோடு சண்டை செய்யக் கோட்டையை விட்டு வெளியே வந்தான். அப்போது உலக மெங்கும் ஒரு பெரிய இருள் மூடியது. உலகத்தில் உள்ளவர்கள் எல்லோரும் நடு நடுங்கினார்கள். நரகாசுரன் பெரிய இருட்டைப்போல் தோன்றி, கிருஷ்ணனை மூடிக்கொண்டு, பல கொடிய பாணங்களைக் கிருஷ்ணன்மேல் எய்தான். ஸ்ரீகிருஷ்ணன் அந்தப் பாணங்களை யெல்லாம் தம்முடைய திவ்விய சக்தியினால் தடுத்து விட்டார். முடிவில் தமது கையிலிருந்த சக்கராயுதத்தை எறிந்தார். அந்தச் சக்கராயுதம் மகா ஜோதியோடு பாய்ந்து அந்த அசுரனை இரு துண்டாகப் பிளந்து கொன்றுவிட்டது.

10. அதைக் கேட்ட சகல ஜனங்களும் தேவர்களும் சந்தோஷித்தார்கள். உலகத்தில் தீமையைப் பரவச் செய்த அசுரனைக் கொன்ற கிருஷ்ணனைப் புகழ்ந்தார்கள். அன்று முதல் உலகில் உள்ளவர்கள் கிருஷ்ணன் நரகாசுரனைக் கொன்றார் என்பதை நினைவு கூறத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடலானார்கள். சிறு பிள்ளைகள் கொடியவனான நரகாசுரன்மேல் பட்டாசு

களைக் கொளுத்திப் போட்டு அவனை ஓட்டு கிறார்கள்.

அர்த்தம் :—வகைகள் = தினுசுகள். ஆவல் = ஆசை. ஆக்கிய = செய்த. களிப்பு = சந்தோஷம். பரபரப்பு = அவசரம். தேசியப் பண்டிகை=தேசத்தார் எல்லோரும் கொண்டாடுகிற பண்டிகை. அசுரன்=தேவர்களும் மனிதர் களும் அல்லாதவன். துன்பப்படுத்து = கஷ்டப்படுத்து. அக்கிரமம்=அடாத செய்கை. ஆகாய மார்க்கம்=ஆகாச வழி. கொடிய=பொல்லாத. திவ்ய சக்தி=தெய்வத்தன்மை யுடைய பலம். நினைவுகூற=ஞாபகப்படுத்த.

---

26. ஆகாயக்கூண்டும் ஆகாயக் கப்பலும்

1. மனிதனுக்குப் பறக்கவேண்டுமென்ற ஆசை வெகு காலமாய் இருந்து வருகிறது.



இந்த ஆசை எப்படி உண்டானது என்று ஒருவருக்குமே தெரியாது. இந்த ஆசையினாலே

தான் நாம் எல்லோரும் இரவில் தூங்கும்போது பறந்து போகிறது போலக் கனவு கண்டிருக்கிறோம். இதனாலேதான் நாம் வணங்குகிற தேவர்களுக்கும், தேவியர்க்கும் எங்கும் பறந்து செல்லும் திறமை உண்டென்று நம்புகிறோம். நாம் சொல்லுகிற கதைகளிலும் பறந்துபோகிற மாயக்குதிரைகள், மயிற் பொறிகள், விமானங்கள் முதலியவற்றைப் புகுத்தி விடுகிறோம்.

2. மனிதர்கள் வெகு காலமாக ஆகாயத்தில் பறக்க ஏதாவது வழியுண்டா வென்று தேடலானார்கள். அதற்காக அவர்கள் செய்த முயற்சிகளுக்கு அளவேயில்லை. மேல்நாட்டில் ஹென்றி கவன்டிஷ் என்றுஒருவர் ஜலவாயுவைக் கண்டு பிடித்தார். அதை ஆங்கில பாஷையில் ஹைட்ரஜன் என்று சொல்லுவார்கள். அதைக் கண்டுபிடித்த சாஸ்திரியாருக்கு அதன் உதவியால் மனிதர்கள் ஆகாயத்தில் பறக்க முயலுவார்கள் என்று தெரியாது.

3. ஒரு நாள் கவன்டிஷினுடைய மாணாக்கர்களில் ஒருவன், தன் உபாத்தியாயர் கண்டு பிடித்த ஜலவாயுவை ஒரு காகிதக் கூண்டில் அடைத்துக்கொண்டு வந்தான். அவன் அதைத் தன் அறையில் உள்ள மேசையின்மேல் வைத்தான். உடனே அது மேசையை விட்டு உயரப் பறந்து வீட்டுக் கூரையில் தட்டி நின்றது. அதைக்கண்ட அந்த மாணாக்கன் மிகவும் பிரமித்தான். ஆனால், அவனுக்கு அதை ஆகாயக்கூண்டு பண்ண உபயோகிக்கலாம் என்ற யோசனை உடனே தோன்றவில்லை.

4. பிரான்சு தேசத்தில் ஒரு சிறு பட்டணத்தில் இரு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒருநாள் தங்களுடைய வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அறையின் மூலையில் இருந்த அடுப்பிலிருந்து கிளம்பின புகை, புகைக்குழாய் வழியாய்ச் சுழன்று மேலே எழுவதைக் கண்டார்கள். அப்பொழுது அவர்கள், புகை வானத்தில் எழவேண்டுமானால், அது காற்றைப் பார்க்கிலும் இலேசாய் இருக்கவேண்டும் என்று நினைத்தார்கள். உடனே காகிதக் கூண்டு ஒன்று செய்து, அதில் புகையை அடைத்து மேலே பறக்கவிட்டார்கள். அந்தக் காகிதக் கூண்டு ஜலவாயு அடைத்த கூண்டைப் போலவே மேலே கிளம்பினது. என்றாலும், அவர்களுக்கு அந்த ஆகாயக் கூண்டுகள் பறக்கக் காரணம் என்னவென்று தெரியாமல் இருந்தது.

5. இதன் பின்பு, அனேக நிருமாணிகள், அவ்விரு சகோதரர்கள் செய்த கூண்டுகளைப் பலமாகச் சீர்திருத்தி, புதிது புதிதான கூண்டுகள் செய்யலாயினர். இந்தக் கூண்டுகள் யாவும் அனலான புகையினாலேயே பறந்தன.

6. சில வருஷங்களுக்குப் பிறகு, மனிதர்கள் ஆகாயக் கூண்டிற்கு ஜல வாயுவே ஏற்றது என்று கண்டுகொண்டார்கள். ஆனால், அந்த வாயுவை அடைக்க எதனால் கூண்டு செய்ய வேண்டும் என்று ஒருவருக்கும் தெரியாமலிருந்தது. முடிவில், ஜல வாயுவை அடைத்து வைக்கத் தகுந்த கூண்டு ஒன்று செய்தார்கள்.

ரப்பர் பூசிய பட்டுத்துணியினால் ஒரு பெரிய உறை தைத்து, அந்த உறையினுள் ஜல வாயுவை அடைத்துக் கூண்டின் வாயைக் கட்டினார்கள். வேண்டியபோது காற்றை வெளியே திறந்து விட ஒரு திறப்பு வாயையும் அதற்கு அமைத்தார்கள். இவ்வாறு செய்த ஆகாயக் கூண்டுகளில் ஏறிக்கொண்டு ஆகாயத்தில் பறந்தவர்கள் அனேகர். அவர்களில் இறந்தவர்கள் அனேகர்; பிழைத்தவர்கள் சிலர்.

7. மனிதர்கள் மேலும் மேலும் ஊக்கத்தோடு ஆகாயத்தில் பறக்க வழி தேடினார்கள். ஆகாயத்தைப் பற்றிப் பலவிதமாக ஆராயத் தொடங்கினார்கள். காற்றின் தன்மைகளைப் படிக்க ஆரம்பித்தார்கள். ஆயினும், ஜல வாயுவினால் உண்டு பண்ணப்பட்ட ஆகாயக் கூண்டு தண்ணீரில் மிதக்கிற கட்டையைப் போல் காற்றின் இஷ்டப்படி சென்றதே தவிர, மனிதர்கள் விரும்பின இடங்களுக்குச் செல்லவில்லை.

8. அப்பொழுது பலர், ஜலவாயு அடைத்துச் செய்த ஆகாயக் கூண்டை தம் மிஷ்டப்படி திருப்பிக் கொண்டு போக என்ன வழி என்று யோசித்தார்கள். முடிவில் எம். ஸான்டாஸ் டுமாண்டு என்பவன் மோட்டார் யந்திரங்களையுடைய ஒரு சிறு ஆகாயக் கப்பலை உண்டு பண்ணினான். அவன், தான் உண்டுபண்ணின விமானத்தில் ஏறிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பி, தனக்கிஷ்டமானபடி காற்றை எதிர்த்துக்கொண்டு சென்று பின் கீழே இறங்கினான்.

9. இதன் பின்பு, ஸெப்பலின் என்பவன் நிஜமான ஆகாயக்கப்பல்களை உண்டு பண்ணலானுன். அவன் உண்டு பண்ணின ஆகாயக் கப்பலைப் பார்த்து, பல நிருமாணிகள் புதிது புதிதாகப் பல கப்பல்கள் செய்யலானுர்கள். இந்தக் கப்பல்கள் எல்லாம் காற்றைப் பார்க்கிலும் இலேசான ஜலவாயுவினுல் பறக்கின்றன.

10. இப்பொழுது மிகவும் பெரிய ஆகாயக் கப்பல்கள் செய்யப்படுகின்றன. இந்தக் கப்பல்களில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் ஏறிப் பிரயாணம் பண்ணலாம். அந்தக் கப்பல்கள் ஏராளமான சாமான்களைச் சுமந்துகொண்டு ஆகாயத்தில் பறந்து செல்லும். அவை மிகவும் அற்புதமானவை.

---

27. பசுப் பாட்டு

1. பாரில் உயிரானுய்—பசுவே!
பண்பாய் உனை வளர்ப்போம்
ஊரின் பொருளானுய்—பசுவே!
ஊட்டி உனை வளர்ப்போம்.

2. புல்லைப் புசித்திடுவாய்—பசுவே!
புனிதப் பால்தருவாய்.
நல்ல குணமுடையாய்—பசுவே!
நாளும் உனைப் புகழ்வோம்.

3. வானோர் மகிழ்ந்திடவே—பசுவே!
வண்ணப் பால் தருவாய்.
வானோர் மழை பொழிவார்—பசுவே!
வேள்வி நெய் சொரிந்தால்.

4. வானோர் மழைபொழியப்—பசுவே!
மண்ணும் செழித்திடுமே.
வானோர் மனமகிழப்—பசுவே!
மண்ணோர் துதிபகர்வார்.

5. கோயிற் பூசனைகள்—பசுவே!
கோடி நடைபெறுமே.
கோலும் தழைத்திடுமே—பசுவே!
குடியும் ஓங்கிடுமே.

6. தாயில் குழவிதனைப்—பசுவே!
தாங்கி வளர்த்திடுவாய்.
நோயால் வருந்திடுவோர்—பசுவே!
நோக்கும் அமுதானாய்.

7. எங்கள் செல்வமென்றே—பசுவே!
என்றும் உனைத்தொழுவோம்.
எங்கள் தெய்வமென்றே—பசுவே!
என்றும் உனைப்புகழ்வோம்.

அர்த்தம் :—பார்=பூமி. பண்பாய்=குணமாக. புசி=சாப்பிடு, தின். புனிதம்=பரிசுத்தம். வண்ணப்பால்=நல்ல பால். வானோர்=தேவர்கள். மண்ணோர்=பூமியின் குடிகள். துதி=புகழ். பூசனை=பூசை, வழிபாடு. கோல்=செங்கோல். தழை=ஓங்கு, வளர். தாயில் குழவி = தாய் இல்லாத குழந்தை. அமுது=இனிமையான உணவு, தேவாமிர்தம்.

—

28. பாடும் இல்லை பலனும் இல்லை

1. முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அம்மன்னன் தன் குடிகளை நேசித்து அவர்களுக்குப் பற்பல நன்மைகள் செய்து வந்தான்; வீடு இல்லாத ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்தான். வறுமையினால் வருந்துவோருக்குப் போதுமான பொன்

வழங்கினுன்; தன் குடிகள் வாழும் நாட்டைப் பலவகையிலும் அழகு செய்தான்.

2. அரசனுடைய அளவில்லாத அன்பையும் தான தருமங்களையும் பெற்ற குடிகள் வரவர உழைப்பற்றுச் சோம்பித் திரிய ஆரம்பித்தனர். அரசன் தன் உதார குணத்தினுல் குடிகள் சோம்பேறிகளானதைக்கண்டு மிகவும் துக்கித்தான். முடிவில் அவர்களுக்கு நற்புத்தி கற்பிக்க வேண்டுமென்று தீர்மானித்தான்.

3. ஒருநாள் அரசன் அதிகாலையில் எழுந்து அரண்மனையை விட்டுப் புறப்பட்டு ராஜவீதி வழியே சென்ருன். அங்கே நடுவீதியில் ஒரு சிறு பள்ளம் தோண்டி அதனுள் ஒரு பேழையை வைத்தான்; ஒரு பெரிய கல்லைப் புரட்டிக் கொண்டுவந்து பேழை வைத்த பள்ளத்தின் வாயை மூடினுன். பின்பு, அருகாமையில் ஓரிடத்தில் அவன் மறைந்திருந்து என்ன நடக்கும் என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

4. பொழுது விடிந்ததும் அந்த வழியாக ஒரு கருமான் வந்தான். அவன் வழியில் கிடந்த கல்லைக் கண்டு, "இந்த ஊரில் இப்படியும் அநியாயம் நடக்குமா? ராஜவீதியின் நடுவில் இவ்வளவு பெரிய கல் கிடக்கின்றதே. அரசன் இதொன்றையும் கவனியாமல் அரண்மனையில் இன்பமாய் வாழ்கிருனே" என்று மிகவும் மனங்கசந்து சொல்லி, அப்பால் விலகிப் போய்விட்டான்.

5. பின்பு, ஒரு வியாபாரியும், ஒரு போர் வீரனும், ஓர் அந்தணனும், ஒரு மந்திரியும்

ஒருவர் பின் ஒருவராக முறையே வந்தார்கள். அவர்களும் கருமானைப் போலவே அரசனைப் பலவாறு கடிந்து பேசிவிட்டு அப்பால் விலகிச் சென்றனர். இப்படியே அந்நாள் முழுவதும் எண்ணிறந்த ஜனங்கள் அவ்வீதி வழியாகச் சென்றனர். ஆயினும், ஒருவராவது அக்கல்லை வழியினின்று அப்புறப் படுத்தவில்லை.

6. முடிவில், சூரியாஸ்தமனமான பின்பு, அந்த வழியாக ஒரு குடியானவன் ஒரு கலப் பையைத் தோளில் சுமந்து கொண்டு வந்தான். அவன் பகலெல்லாம் வயலில் உழுது பாடுபட்டு மிகவும் களைத்திருந்தான். அவன் வழியில் ஒரு பெரிய கல் கிடப்பதைக் கண்டான்; உடனே, தன் கலப்பையைக் கீழே வைத்தான். "இது யார் செய்த வேலை? இரவில் இந்த வழியாக நடப்பவர் இதில் இடறி விழுவார்களே; நான் இதை இப்பொழுதே அப்புறப்படுத்த வேண்டும்" என்று சொல்லிக்கொண்டான். உடனே கல்லின் கீழ் இரு கைகளையும் கொடுத்துத் தூக்கிப் புரட்ட முயன்றான். ஆனால், கல் மிகவும் பாரமாய் இருந்தது. என்றாலும் அவன் அதை அங்கேயே விட்டுப் போகத் துணியவில்லை.

7. குடியானவன் கல்லைக் கொஞ்சம்கொஞ் சமாக நகட்டி வீதியில் எவரும் நடமாடாத ஓர் இடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தான். பின்பு, கல்லிருந்த பள்ளத்தை மூட வந்தபொழுது, அங்கே ஒரு பேழை இருக்கக்கண்டான். அவன்

அப்பேழையையும் கலப்பையையும் எடுத்துக் கொண்டு தன் வீடு சென்ருன்.

8. குடியானவன் வீட்டில் எரிந்துகொண் டிருந்த விளக்கு வெளிச்சத்தில் அப்பெட்டி யைத் திறந்து பார்த்தான். அவன் உடனே பிரமித்துத் திகைத்துப்போனுன். ஏனென்ருல், அதனுள் விலைமதிப்பற்ற நவமணிகளும், பொன்னும் நிறைந்திருந்தன. அதோடு அதில் ஒருகடிதமும் இருந்தது. குடியானவன் உடனே அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில்,

“என் நண்பனே! நான் உன்னை என் முதன் மந்திரி உத்தியோகத்தில் நியமித்திருக் கிறேன். நீ நாளைக் காலையில் என்னை அரண் மனையில் வந்து தவருமல் பார்க்கவேண்டும்.

இங்ஙனம்,

அரசன்”

என்று எழுதியிருந்தது.

9. குடியானவன் கடிதத்தைப் பன்முறை யும் படித்தான்; சொல்லமுடியாத சந்தோஷத் திஞல் கடவுளுக்கு நன்றிசெலுத்திஞன். அவன் மறுநாள் கடிதத்தில் குறித்திருந்தபடியே அரசனிடம் சென்ருன். அரசன் குடியான வனை வரவேற்று அவனைத் தனக்கு முதல் மந்திரியாக வைத்துக் கொண்டான்.

10. குடியானவன் பற்பல உபாயங்களிஞல் குடிகளை மறுபடியும் சுறுசுறுப்புடையவர்களாக

வும் நாட்டின் நன்மைக்காகப் பாடுபடும் உழைப்பாளிகளாகவும் மாற்றிவிட்டான்.

அர்த்தம் :—வறுமை = தரித்திரம். வழங்கினுன் = கொடுத்தான். உழைப்பற்று = வேலை இல்லாமல். உதார குணம் = மற்றவர்களுக்குக் கொடுக்கும் குணம். ராஜவீதி = அரண்மனைக்குச் செல்லும் தெரு. மனங்கசந்து = மனத்தில் வெறுப்புடன். அந்தணன் = பிராமணன். பிரமி = மயங்கு. நவமணி = ஒன்பது வகையான இரத்தினங்கள். உபாயம் = வழி.

---

29. தேச பக்தி

முன்னொரு காலத்தில் மகத நாட்டார் முதலிய வடதேசத்தார் சேர சோழ பாண்டியர்கள் ஆண்டு வந்த தமிழ் நாட்டின் மீது ஒரு பெரும் படையைத் திரட்டி வரக் கண்ட தமிழ் வேந்தர் மூவரும், தங்கள் படையை ஒன்ருய்ச் சேர்த்துப் பகைவர்களை எதிர்த்துத் தடுத்தார்கள். அப்போது காஞ்சீபுரத்தில் ஒரு வீரக் குடும்பத்தைச் சேர்ந்த வீரம்மாள் என்னும் ஒரு கிழவி, தமிழ் நாட்டைக் காத்து உதவி செய்யத் தன் ஒரே மகனையும் போருக்கு அனுப்பினுள். போர் மும்முரமாய் நடக்கும்போது ஒரு நாள் அவளுடைய தோழி மந்தரை என்பவள் அவள் வீட்டிற்கு வந்து தூணைக் கட்டிக் கொண்டு நின்று,

மந்தரை :—அடி வீரம்மா! உன் மகன் நாட்டுழியன் எங்கே? அவனைக் காணுமே!

வீரம்மாள் :—நாட்டுழியன் நாட்டுழியம் செய்யப்போனுன்.

மங் :—என்ன ?

வீர :—என்ன, மந்தரை! இப்போது நமது நாட்டில் நடப்பது உனக்குத் தெரியாதா ?

மங் :—ஆம், தெரியும். வடநாட்டார் படையெடுத்து நமது நாட்டில் நுழைந்து இதைப் பிடிக்கப் போரிடுகிறார்கள்.

வீர :—அப்போரில் பகைவர்களைத் துரத்தி அடித்து, நமது தாய் நாட்டைக் காக்கவே என் மகன் போயுள்ளான். (நாட்டுழியனின் நண்பன் நற்புத்தி வாடிய முகத்துடனும், அவன் மைத்துனன் குறும்பேசன் கவலையில்லாமலும் கேட்டுக்கொண்டே வந்து, தலைக்கடைக் கதவின் பின் மறைந்து நிற்கிறார்கள்.)

மங் :—என்னடியம்மா! உன் மனம் கல்லா ! காலம் இல்லாக் காலத்தில் பெற்ற ஒரே அருமை மகனை நீ எப்படித்தான் மனந்துணிந்து சண்டைக்கு அனுப்பினாயோ? நீயோ நரைத்துத் தள்ளாத கிழவியாய் விட்டாய்! உன் வயிறும் பதைக்க வில்லையா ? அவன் சண்டையில் வெட்டுண்டு இறந்தால் என்ன செய்வாய்? உன் கணவனையும் முன் ஒரு போரில் இழந்து விட்டாயே ! உன்னைக் காப்பவர் யாரடி ?

நற் :—(மெதுவாக) ஐயோ! இப்பாட்டிக்கு நான் இப்போது என்ன சொல்வது மைத்துனா?

குறும் :—(மெதுவாக) போடா, பிச்சி ! என்ன சொல்வது ! நேரில் கண்டதைச் சொல்லேன் !

வீர:—(எழுந்து நின்று சற்று கோபத்தோடு மந்தரையை உற்று நோக்கி) என்னடி, பேதாய்! என் மனம் மாத்திரம் அல்ல, என் வயிறும் கல்லே! மிருகங்களை அடித்துக் கொல்லக் குகையை விட்டுப்போன புலி திரும்பாமலிருந்தால், அந்தக் குகை வருந்துமா? அது போல், என் வயிறு குகை! அவன் புலி! அவன் பகைவர்களை அடித்துத் துரத்தினால் நமது தமிழ் நாட்டைக் காத்த தேச பக்தன் ஆவான்; அல்லது, போரில் வீரத்தோடு எதிர்த்து நின்று அவர்களால் கொல்லப்பட்டால் நமது நாட்டின் நன்மைக்காக இறந்த நல்லோன் ஆவான்! இவ்விரண்டிலொன்றே எனக்கு நிரம்பச் சந்தோஷம் தரும். என்னைக் காக்க கடவுள் இருக்கிறார்! மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்.

மங்:—வீரம்மா! நீ என்ன வல்லாண்மைக் காரி; நீ சொல்வது ஒன்றும் எனக்கு நன்றாயில்லை என்ன தான் ஆனாலும் வீண் புகழுக்கு ஆசைப்பட்டு இப்படிப் பிள்ளையையும் இழக்கலாமோ?

வீர:—அடி போடி, அறிவில்லாதவளே! கடமை தெரிந்தவளாயிருந்தால் இப்படியெல்லாம் பேசமாட்டாய்!

மங்:—கடமை! என்ன கடமையாம்? கடமை மெத்தவுந் தெரிந்தவள்! அந்தக் கடமை என்ன சொல்லடி?

வீர:—நாட்டிற்குழைக்கும் நல்ல மக்களைப் பெற்று வளர்த்துக் கொடுப்பது தாயின் கடமை மகனைக் கல்வியில் சிறந்தவனாக்குவது

தந்தையின் கடமை; நல்லறிவு புகட்டுவது குருவின் கடமை; நல்லொழுக்கத்தில் செலுத்துவது அரசனின் கடமை; தன்னலம் பாராட்டும் தோழனை நாணமுண்டாக இடித்து, நல்ல வழிப் படுத்துவது நண்பனின் கடமை; கற்பன கற்று, அன்பு அறிவு ஒழுக்கத்தோடு நடந்து, எதிர்த்தவர்களை அடக்கி, இசைந்தவர்களைத் தாங்கி, அஞ்சினவர்களை ஆதரித்து, தாய் நாட்டிற்கு உழைப்பது மகனின் கடமை என்று இப்போதாவது தெரிந்து கொள்.

நற் :—(மெதுவாக) இனிமேல் சும்மா இருப்பது சரியல்ல. (வீரம்மாவின் முன் வந்து துக்கத்தோடு தாழ்ந்த குரலாக மைத்துனனைப் பார்த்து)

என்ன சொல்வேன் மைத்துனா! நான் இப்பாட்டிக்கு
என்ன சொல்வேன் மைத்துனா? மைத்துனா, மைத்துனா!

(பின் வீரம்மாவைப் பார்த்து)

என்ன சொல்வேன் பாட்டி நின்மகன்—பாட்டை
என்ன சொல்வேன் பாட்டி ! பாட்டி ! ! பாட்டி ! ! !

(பின் ஆகாயத்தைப் பார்த்து)

என்ன சொல்வேன் ஆ தோழா! உந்தன் அருமைத்தாய்க்கு
என்ன சொல்வேன் ஆ தோழா ! ஆ தோழா ! ஆ தோழா!

வீர:—நற்புத்தி ! நடந்ததென்ன ? கலங்காதே, அஞ்சாமல் சொல்.

நற்:—ஐயோ பாட்டீ ! என், என், என், நண்பன், உன்......ன்...மகன்! நாட்டு...ஊ...ழியன்...ஈ...ஈ...ஈட்டியா...ல் குத்துண்டு விழுந்தா...ஆ...ஆன் ; பிழைப்பானோ! என்னவோ ! தெரியவில்லை.

மங் :—ஐயோ! ஐயோ மகனே!! மகனே!

வீர :—காயம் மார்பிலா? முதுகிலா?

நற் :—மார்பில்தான். நாட்டுழியன் பகைவர்களையும் சிறந்த வீரர்களையும் கொன்ருன். கடைசியில் ஒருவன் மறைந்து நின்று என் நண்பனைக் குத்தினுன்.

வீர :—அப்படியா வெகு சந்தோஷம். இப்போது நாட்டுழியன் என் மகன் ஆனுன்.

மங் :—ஐயோ! இவளுக்கு என்ன தைரியம்! இவள் மனம் இரும்பா!

குறு :—(குறும்புத்தனமாய்) பாட்டி!

போய்தனையே சொன்னுனே
போல்லாத வம்பனிவன்
போரினிலே உன்மகனும்
புறங்கோடுத்தான் பார்! பார்!! பார்!!!

(நற்புத்தி தடுத்தும் நிற்காமல்) பாட்டி! காயம் முதுகில்தான்; மார்பில் இல்லை. அவன் பகைவருக்குப் பயந்து ஓடிவரும்போது ஒருவன் ஈட்டியால் முதுகில் குத்தி வீழ்த்தினுன். இதையறிந்த மூவேந்தரும், அவனுடைய காயம் ஆறத் தகுந்த ஏற்பாடு செய்துள்ளார்கள். அவன் தேறி யெழுந்தபின், அவன் பயந்து திரும்பி ஓடிவந்த குற்றத்திற்காக அவனைத் தண்டிக்கப் போகிருர்களாம். நற்புத்தி தன் தோழன் குற்றத்தை மறைக்கிருன்.

வீர :—சீ கெட்டான், துரோகி! அவனு என் மகன்!

நற் :—பாட்டீ ! இவன் குறும்பு செய்கிருன். உண்மையாகவே காயம் மார்பில்தான்.

வீர :—(நம்பாமல், அங்கே கூடத்தில் மாட்டித் தொங்கியிருந்த ஒரு வாளை எடுத்துக் கொண்டு) நான் இவ்வாளும் கையுமாகப் பாசறைக்குச் சென்று பார்ப்பேன் ; காயம் முதுகிலாளுல் அவன் வளர்வதற்குப் பால்தந்த இம் மார்பை அறுத்தெறிவேன்; அவனையும் வெட்டி நாணும் மாள்வேன். (என்று சொல்லிக்கொண்டு யார் தடுத்தும் நிற்காமல் ஓடினதால், மற்ற மூவரும் பின் தொடர்ந்தார்கள். அவள் மகனிடம் போய் அவன் முதுகைத் தடவிப் பார்க்கிருள். முதுகில் ஈட்டி பாய்ந்த காயம் காணப்படவில்லை. மார்பில்தான் பெருங் காய மிருக்கிறது.)

சேனுதிபதி :—பாட்டீ ! உன் மகன் பகைவரைச் சிதற அடித்துப் பல வீரர்களைக் கொன்று நின்ருன். ஆனுல், ஒரு அற்பன் மறைந்திருந்து இவன் மார்மீது ஈட்டியை எறிந்தான். இன்றைய வெற்றிக்கு உன் மகன் தான் காரணம்.

வீர :—(மகிழ்ந்து, தன் மகனை வாரியெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு, உச்சி முகந்து முத்த மிட்டாள். பின்புஎல்லோரையும்பார்த்து)

இன்றே என்மகன் ! இன்றே நன்மகன் !
நன்றே உழைத்த நாட்டூழியன் இவனே
தகுமே தமிழ்த் தாய்க் குழைத்திடு நலமே !
தகுமே இவற்கு நாட்டூழியன் பெயரே !
உண்மை வீரன் இவனே யாவான் !
திண்மையில் இவற்கு நிகர்யார் யாரே !

இன்று தான் இவன் உண்மையான நாட்டூழியன் ஆனுன். இவனே தமிழ்த் தாய்க்குரிய மகன் ! இவனே தேசபக்தன்! இவனே நன்மகன்! நன் மகன்.

நாட்டூழியன் :—(மயக்கம் தெளிந்து, தாயைக் கண்டு மெல்லிய குரலாய்) அடியேன், வந்தனம், அம்மா! வந்தனம். தங்களை இங்கு காணப் பெற்றேன்! இதுவே என் புண்ணியம்.

வீர :—நீ முதுகு காட்டி ஓடினுய் என்று கேட்டு, கோபத்தோடு உன்னைக் கொன்று என்னை யும் மாய்த்துக்கொள்ள வந்தேன். மகனே! நீ இங்கு வீரத்தோடும் காயம் பட்டிருக்கக் கண்டு மகிழ்ந்தேன். இன்று நீ நம் குடும்பப் புகழை யும், நாட்டின் கீர்த்தியையும் பாதுகாத்தாய் எனக் கேட்டு மனம் பூரித்தேன். கண்ணே ! இன்றே நீ உண்மை நாட்டூழியன். (முத்தமிடுகிருள்)

நாட்டூழியன்:—அம்மா!பகைவர்க்குஅஞ்சித் தோற்று உயிருடன் உம்மைப் பார்க்க உம்மிடம் திரும்பி வருவேனு? ஒருக்காலும் திரும்பேன்! திரும்பேன் !!

எல்லோரும் :—(சந்தோஷமாகக் கைகொட்டி) வீரத் தாய்க்கும் நாட்டூழியனுக்கும் ஜே ! ஜே !! ஜே !!! நம்மருமைத் தமிழ் நாட்டிற்கு ஜே ! ஜே !! ஜே !!!

அர்த்தம் :—நாட்டூழியன் = நாட்டு ஊழியன், நாட்டுக் காக வேலைசெய்பவன். பிச்சி = பைத்தியம் பிடித்தவன். பேதாய் = அறிவு இல்லாதவன். கோழை = பயங்கொண்ட வன். தேசபக்தன் = தாய் நாட்டின்மீது அன்புடையவன்.

வீரன்=தைரியசாலி. வல்லாண்மைக்காரி=பலமும்தைரியமு முடைய ஆண் பிள்ளையைப் போன்றவள். புகழ்=கீர்த்தி. கடமை=தவறாமல் செய்ய வேண்டுவது. தன்னலம்=சுய நலம். குறும்பு=வம்பு செய்தல். பாசறை=சேனை தங்கும் இடம். சேனாதிபதி=சேனைக்குத் தலைவன். சேனை=படை.

---

30. பாரத நாடு

(ராகம்—ஹிந்துஸ்தானி தோடி.)

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

1. ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே,
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

2. தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே,
சாரத்திலே மிகு சாத்திரங்கண்டு
தருவதிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

3. நன்மையிலே உடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே,
பொன்மையில் ஒத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

4. ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே—புய
வீக்கத்திலே உயர் நோக்கத்திலே,
காக்கத்திறல் கொண்ட மல்லர்தஞ்சேனைக்
கடலினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

5. வண்மையிலே உளத் திண்மையிலே—மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே,
உண்மையிலே தவறாத புலவர்
உணர்வினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

6. யாகத்திலே தவ வேகத்திலே—தனி
யோகத்திலே பல போகத்திலே,
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார்தம்
அருளினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

7. ஆற்றினிலே சுனை ஊற்றினிலே—தென்றல்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பயன் ஈன்றிடுங்காலி
இனத்தினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

8. தோட்டத்திலே மரக் கூட்டத்திலே—கனி
ஈட்டத்திலே பயிர் ஊட்டத்திலே,
தோட்டத்திலே அடங்காத நிதியின்
சிறப்பினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

(பாரதியார்.)

அர்த்தம்:—பார்=உலகம். ஞானம்=அறிவு. பர=மேலான. மோனம்=மௌன விரதம். அன்னம்=சோறு. கானம்=இராகம். அமுது=பால். கவிதை=பாட்டு. உயர்=மேலான. தீரம்=தைரியம். படை=ஆயுதம். ஈரம்=அன்பு. சாரம்=சத்து. உடல்=உடம்பு. பன்மை=மிகுதி. மறம்=வல்லமை. மாதர்=பெண்கள். புகழ்=கீர்த்தி. ஆக்கம்=செல்வம். ஊக்கம்=உற்சாகம், முயற்சி. புறவீக்கம்=தோள் பருத்திருத்தல். திறல்=வல்லமை. மல்லர்=வலிமையுடையவர், மல்யுத்தம் செய்பவர். வன்மை=வளமை=உளத்திண்மை=மனவலிமை. மனத்தண்மை=மனக்குளிர்ச்சி, அருள். மதிநுண்மை=புத்திநுட்பம். ஆகம்=உடம்பு. ஊற்று=சுரப்பு. ஈன்றிடும்=கொடுக்கும். காலி இனம்=பசுக்கூட்டம். கனி=பழம். நிதி=செல்வம்.

31. சாரணச் சிறுவர் கடிதங்கள்

கடிதம் I

24, பச்சையப்பர் தெரு,
காஞ்சீபுரம்;
7-3-1929.

என் அன்புடைய நண்பனாகிய அருட்பிரகாசத்திற்கு எழுதுவது :—

நமஸ்காரம். இவ்விடத்தில் யாவரும் சுபம். அவ்விடத்திய சுபச்சேதிகளைக் குறித்து அடிக்கடி எழுதவும்.

இங்கு எமது பள்ளிக்கூடத்தில் "சாரணச் சிறுவர் கூட்டம்" ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் சேர்வது நலம் என்று எங்களுடைய உபாத்தியாயர் எங்களுக்குப் போதிக்கின்றார். ஆனால், என் தகப்பனார், அதில் சேர்வதால் படிப்பு பாழாகும் என்று சொல்லித் தடுக்கின்றார். பல பிள்ளைகள் அதில் சேர்ந்து கெட்டுப் போவதாக அவருடைய நண்பர் ஒருவரும் கூறுகிறார். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நீ சென்னையிலிருப்பதால் அதைப் பற்றிய அநுபவம் உனக்குத் தெரிந்திருக்கலாம். ஆகையால், சாரணச் சிறுவர் இயக்கத்தின் நோக்கங்களையும், நன்மை தீமைகளையும் நான் விவரமாக அறிந்துகொள்ளும்படி நீ மிகவும் விளக்கமாய் எழுதி அனுப்பவும். நீ ஒப்புக்கொண்டால் என் தந்தையும் ஒப்புக்கொள்வார்.

ஆனதால், உடனே அன்பாய்த் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இங்கு இப்போது சீதோஷ்ண நிலை தேசத்திற்குப் பொருத்தமானதாகவே இருக்கிறது. கால நிலையும் மலிவாகவே இருக்கிறது. சென்னையின் தற்கால நிலையையும் தெரிவிக்கவும். இன்னும் வேறு விசேஷமிருப்பின் அறிவிக்கவும்.

வேணும் நமஸ்காரம்.

இங்ஙனம் :

உனது அன்புள்ள,

விலாசம் :— அ. கருணைப்பிரகாசம்.

திருவளர் செல்வன்,
தோ. அருட்பிரகாசம்,
40, இராஜ வீதி,
தங்கசாலைப் போஸ்டு, சென்னை.

கடிதப் பயிற்சி:—உனக்குப் பிரியமான ஒரு விளையாட்டைப்பற்றி வெளியூரிலிருக்கும் உன் தம்பிக்கு ஒரு கடிதம் எழுதி, அதை உன்னால் புதிதாகச் செய்யப்பட்ட காகிதப் பை அல்லது உறை ஒன்றில் இட்டு, விலாசம் எழுதி, உன் உபாத்தியாயருக்குக் காட்டவும்.

———

கடிதம் II

40, இராஜவீதி,
தங்கசாலைப் போஸ்டு, சென்னை ;
10-3-1929.

என் அன்புடைய நண்பனுகிய கருணைப் பிரகாசத்திற்கு எழுதுவது :—

நமஸ்காரம். நின் அன்பான கடிதம் கிடைத்தது. அதைப் பார்த்து மிகவும் மகிழ்ந்தேன். இங்கு யாவரும் க்ஷேமம். அவ்வாறே அவ்விடத்திய க்ஷேமங்களைக் குறித்து அடிக்கடி எழுதி வரவும்.

நண்பா ! நமது நாட்டின் நன்மையைக் கருதியே நமது காருண்ய துரைத்தனத்தாரால் "சாரணச் சிறுவர் இயக்கம்" ஆதரிக்கப்பட்டு வருகிறது. அதனுடைய விதிகளை அனுசரித்து நடந்து, நமது நாட்டைக் காக்கவேண்டியது நம்முடைய முதற்கடமையாம். அதனுடைய விதிகளின் பிரதி ஒன்றை இக்கடிதத்துடன் அனுப்பியிருக்கின்றேன். அதை நீ வாசித்த பின் நின் தந்தையாருக்கும் காட்டவும் சாரணச் சிறுவர் கூட்டத்தில் சேர்ந்து உழைப்பதால் நன்மையே தவிரத் தீமை இல்லை அதனுல் படிப்புக் கெடவேண்டிய காரணம் இல்லை. படிக்கும் வேளையில் படிக்கவும், உழைக்கும் வேளையில் உழைக்கவும் வேண்டியது அவசியம் அல்லவா? இவ்விதியை உறுதியாய்ப் பின்பற்றி நடப்பவர்கள் கெடமாட்டார்கள். உண்மைச் சாரணச் சிறுவன் இவ்விதியின் வழியே

நடப்பவன் ஆவான். ஆகையால் அவன் எல்லா விஷயங்களிலும் மேன்மைப்படுவான்.

ஆனல், சில போலிச் சாரணச் சிறுவர்கள் படிப்பதற்குச் சோம்பல்கொண்டு, எந்நேரமும் அவ்வியக்கத்திற்கு உழைப்பதாகப் பாசாங்கு செய்கிருர்கள். அவர்கள் பட்டமும் பதக்கமும் பெற்று, வீண் புகழ் அடைய விரும்பும் சுயநலப் பிரியரே ஆவார்கள். அவர்களால் யாதொரு நன்மையும் இல்லை. அவர்கள் நாட்டுக்கும் தங்களுக்கும் துன்பம் இழைத்தவர்களே ஆவார்கள். ஆகையால், அவர்களைப்போல நடவாமல், சாரணச் சிறுவர் இயக்கத்தின் விதிவிலக்கு அறிந்து, உண்மையாய் நடப்பவனே சாரணச் சிறுவன் ஆவான். நான்சென்னையிலிருக்கும் இக்கூட்டத்தில் சேர்ந்துள்ளேன். நீயும் சேரலாம். சேருவதாயின் விதிவிலக்கு அறிந்து நடக்கவும்.

இங்கு இப்போது சூரிய வெப்பம் தாங்கக்கூடாததாயிருக்கின்றது. தாங்கக்கூடாத கடுங்காற்று மிகவும் வெப்பமாக வீசுகிறது. இரண்டொரு மழை பெய்தால் சமநிலைக்கு வரும். இங்கு காலவிலை சற்றுக் கிராக்கியாகவே இருக்கிறது. எனினும், எங்கும் கிடைக்காத பொருள்களையெல்லாம் இங்கு எளிதிற் பெறலாம்.

அடிக்கடி கடிதம் எழுதி வரவும்; வேணும் நமஸ்காரம்.

இங்ஙனம் உனதன்புள்ள,

தோ. அருட்பிரகாசம்.

32. வெற்றி வேற்கை III

4. பெருமை சிறுமை வரும் விதமும், நட்பின் திறமும்

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
கலக்கினும் தண்கடல் சேறாகாது.
அடினும் பால்பெய்து கைப்பறாதுபேய்ச் சுரைக்காய்.
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது.
பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

அதனால்

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க்குமே.
நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க் கொள்ளாதே.

5. பிழை பொறுக்கும் திறம்

சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே.
சிறியோர் பெரும்பிழை செய்தனராயின்
பெரியோர் அப்பிழை பொறுப்பதும் அரிதே.

6. கல்வி மாண்பு

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதராகும்மே.
நாற் பாற் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றிலனாயின் கீழிருப்பவனே.
எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை வருக என்பர்.
அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

ஆகையால்

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

7. எவர்க்கு எது இல்லை

ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.
அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
கேளும் கிளையும், கெட்டோர்க்கில்லை.
நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை இல்லில்லோர்க்கே.

அர்த்தம் :—(4) அடினும்= காய்ச்சினுலும். ஆவின் பால்=பசுவின்பால். செம்பொன்=செம்மையான தங்கத்தை. அடினும்=சுட்டாலும். தன்னெளி=தன்னுடைய பிரகாசத்தில். அருது=நீங்காது. காரகில்=கரிய அகில் கட்டையை. பொல்லாங்கு=துர்நாற்றம்.கமழாது=வீசாது. தண்கடல்=குளிர்ச்சி பொருந்திய கடல். பால் பெய்து= பாலை விட்டு. கைப்பறுது=கசப்பு நீங்காது. உள்ளி=உள்ளிப்பூண்டிற்கு. பல்விரை=பல வாசனைகளை. ஊட்டினும்= சேர்த்த போதிலும். கமழாது=நல்லது வாசனை வீசாது. பெருமையும்=உயர்வும். சிறுமையும்= தாழ்மையும். தான் தர=தான் தன் செய்கையால் கொடுக்க. கேண்மை= சினேகமானது. இருநிலம்=பெரிய பூமி. பிளக்க=வெடிக்க. வேர்=வேரை. வீழ்க்கும்=ஊன்றும். மூர்க்கர்=கோபிகளுடைய. கேண்மை=சிநேகம்.

(5) அரிதே=அருமையே.

(6) கற்கை = படித்தல். பிச்சைபுகினும் = பிச்சை எடுக்க நேரிட்டாலும். கல்லா ஒருவன்=படியாத ஒருவன். குலநல=தன் ஜாதிச் சிறப்பை. பேசுதல் = சொல்லுதல். பதராகும்=பதருக்கு ஒப்பாகும். நாற்பால் = அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் என்னும் நான்கு வகையான. குலத்தில்=ஜாதியில். மேற்பால்=முன்னின்ற (அந்தணர்) வருணத்தில் பிறந்த. கற்றிலன் ஆயின் = படியாதவனுனல்.

கீழ் இருப்பவனே=(அவன்) தாழ்ந்த இடத்தில் இருக்கத் தக்கவனே. எக்குடி பிறப்பினும் = எந்த வமிசத்தில் பிறந்தாலும். அறிவுடை=அறிவுடைய.

(7) ஞானி = ஞானவானுக்கு. அச்சமும்‌ பயமும். நாணமும்= வெட்கமும். அறிவிலார்க்கு = அ விவில்லாதவர்களுக்கு. கேளும்=நட்பினரும். கிளையும்=சுற்றத்தாரும். நலிந்தோர்க்கு = பசியாலும் நோயாலும் வருந்துவோர்க்கு. நல்ல ஞாலமும் = நல்ல பூவுலகையும். வானமும் = தேவலோகத்தையும். பெறினும்=பெற்றாலும். இல் இல்லோர்க்கு =மனைவி இல்லாதவர்களுக்கு.

---

33. வெற்றி வேற்கை IV

8. நிலையாமை

உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா.

I. செல்வம் நிலையாமை

குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
சிறப்பும் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
எழுநிலை மாடம் கால் சாய்ந்துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.

II. வறுமை நிலையாமை

அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசரோ டிருந்து அரசாளினும் ஆளுவர்.
பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

III. யாக்கை நிலையாமை

மணவணி யணிந்த மகளிர் ஆங்கே
பிணவணி அணிந்து தம் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

ஆகையால்

இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே ;
இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

9. அச்சநிலை

தறுகண் யானை தான்பெரிதாயினும்
சிறுகண் மூங்கிற் கோற் கஞ்சும்மே.
குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புன்தலை புல்வாய் புலிக்கஞ் சும்மே.
ஆரையாம்பள்ளத் தூடே வாழினும்
தேரை, பாம்பிற்கு மிகவஞ் சும்மே.

10. இதனில் இது நன்று

கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே.
சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன் தேர் குறவர் தேயம் நன்றே.

11. பதராவர்

காலையும் மாலையும் நான்மறை யோதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே.
அங்கண்மா ஞாலத் தரசு வீற்றிருந்து
வெங்கலி கடியா வேந்தனும் பதரே.
முதலுள பண்டம் கொண்டுவாணிபஞ்செய்து
அதன் பயன் உண்ணு வணிகரும் பதரே !

வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.
தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன் கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

12. பொய் மெய் நிலைகள்

பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.
மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்
பொய் போலும்மே பொய்போ லும்மே.

13. ஒழிக்கத் தகுவது

பழியா வருவது மொழியா தொழிவது.
அறியா வருபுனல் இழியா தொழிவது.

14. போக்கு வரவு

துணையோ டல்லது நெடுவழி போகேல்.
புணைமீ தல்லது நெடும்புன லேகேல்
வழியே ஏகுக வழியே மீளுக.

அர்த்தம்:—(8) I. உடைமை=செல்வம் ஒருவழி=நிலையாக. குஞ்சரம்=யானை. நடை மெலிந்து=கால்நடையினால் தளர்ந்து. அறக்கூழ்ச் சாலை=தரும சத்திரம். இரு நிதி=பெருஞ் செல்வம். ஏழுநிலை=ஏழுமாடி. மாடம்=மாளிகை. கால் சாய்ந்து=கீழே விழுந்து. உக்கு=நொறுங்கி. பாழ்=பாழ் நிலம்.

II. அறத்திடு=தருமத்திற் கென்று கொடுக்கும். பெற்றம்=மாடு. பொன்தொடி=பொன் வளையல் அணிந்த. செறிந்து=நெருக்கமாகக் கூடி. நெல் பொலி=தானியமிக்க. நெடு=பெரிய.

III மண அணி=கலியாணத்திற் கென்று அணியும் ஆபரணங்கள். பிண அணி=பிணக்கோலம். கொழுநர்=கணவர். தழீஇ=தழுவிக் கொண்டு. கோடி=புதுச்சேலை.

(9) கண் மூங்கில்=கணுக்களை உடைய மூங்கில். ஊடு=நடுவில். புன்மை=சிறுமை. புல்வாய்=மான். ஆரையாம்=ஆரைக் கொடிகளுள்ள.

(10) நாட்டின்=நாட்டில் இருப்பதைப் பார்க்கிலும். சான்றோர்=அறிவு மிக்கவர். தொல்பதி=பழமையான ஊர். தேன்தேர்=தேனைத் தேடுகின்ற. குறவர் தேயம்=நாகரிக மில்லாத குறவர் வாழும் காடு.

(11) நான் மறை=நான்கு வேதங்கள்: இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்பனவாம். அங்கண் மா ஞாலம்=அழகிய இடத்தை உடைய பெரிய உலகம். அரசு வீற்றிருந்து=சிங்காசனமேறி இருந்து அரசுபுரிந்து. வெங்கலி=குடிகளுக்கு வரும் கொடிய துன்பம். கடியா=நீக்காத. முதல் உள பண்டம்=முதலாக உள்ள பொருளை. வாணிபம்=வர்த்தகம். அதன் பயன்=அதனால் வரும் இலாபத்தை. எய்த்து=ஏங்கி. அங்கு=அவற்றால். இருக்கும்=சோம்பி இருக்கும். ஏழை=அறிவில்லாதவன்.

(12) சொல் வன்மை=வாக்குச் சாதுர்யம். சொல மாட்டாமையால்=வகைப்படுத்திச் சொல்ல வழி தெரியாமையால்.

(13) பழியா வருவது=பின் நிந்தையாக வரும் காரியத்தை. மொழியாது ஒழிவது=சொல்லாமல் விட வேண்டும்.

(14) நெடுவழி=நீண்டவழிப் பிரயாணம். புணை=தெப்பம், கப்பல். நெடும்புனல்=நீண்ட கடலில். வழி=இல்லற வழி.

Printed at The Royal Printing Works, Mount Road, Madras.

கோகலே தமிழ் வாசகங்கள்

கோகலே தமிழ் வாசகம்	I—1-ம் வகுப்பிற்கு		0-2-0
ஷை	II—2-ம்	,,	0-3-0
ஷை	III—3-ம்	,,	0-4-0
ஷை	IV—4-ம்	,,	0-5-0
ஷை	V—5-ம்	,,	0-6-0
ஷை	VI—6-ம்	,,	0-7-0
ஷை	VII—7-ம்	,,	0-8-0
ஷை	VIII—8-ம்	,,	0-9-0

கோகலே 6, 7, 8-ம் வாசகங்களுக்குத்

துணைப்புத்தகங்கள் முறையே விலை அணா 4, 5, 6.

பாலர் தமிழ் வாசகங்கள்

பால சிக்ஷை	I—1-ம் வகுப்பிற்கு		0-2-0
பாலர் தமிழ் வாசகம்	II—2-ம்	,,	0 3-0
ஷை	III—3-ம்	,,	0-4-0
ஷை	IV—4-ம்	,,	0-5-0
ஷை	V—5-ம்	,,	0 6-0

செய்யுள் மலர்

உலகநீதி	மூலமும்; உரையும்	0-0-9
ஆத்திசூடி	,,	0-1-3
கொன்றைவேந்தன்	,,	0-1-0
வெற்றிவேர்கை	,,	0-1-3
வாக்குண்டாம்	,,	0-1-6

Printed at The Royal Printing Works, Mount Road, Madras